விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 05 திங்கட்கிழமை (21.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276




# மக்களை மீளக்குடியமர்த்துமாறு இலங்கைக்கு இந்தியா அழுத்தம்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களை நீண்ட கால மாக தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பது குறித்து தனது ஆழ்ந்த கவலையை இலங்கைக்கு இந் திய அரசு வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் மீள் குடிய மர்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்படியும் அது அரசைத் தூண்டி உள்ளது. புதுடில்லியின் கவலைகள் இரு வெவ்வேறு வழிகளில் கொழும்புக்குத் தெரியப் படுத்தப்பட்டிருக்கின்றது. (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் தலைமையிலான குழு நேற்று நியூயோர்க் பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 64 ஆவது அமர்வு நாளை மறுதினம் நியூயோர்க் தலை மையகத்தில், இடம்பெறவுள்ளது. இந்த அமர் வில் கலந்து கொள்ள இலங்கை சார்பாக பிர தமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் தலை மையிலான விசேட குழு ஒன்று நியூயோர்க் சென்றுள்ளது.

எதிர் வரும் 26ஆம் திகதி பிரதமர் இலங்கை சார்பான தமது உரையை நிகழ்த்தவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இவர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூனை சந்தித்து உரையாடவுள்ளார்.

இது தவிர நியூயோர்க்கில் தங்கி உள்ள இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-7)

## யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களை துணைவேந்தரிடம் கையளித்தார் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

எமது சுதந்திரங்களை நாமே பாதுகாப் பதுடன் அவற்றை எவருக்கும் விட்டுக் கொடுக் கக் கூடாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட் சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவை கள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரு மான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியா நலன்புரி நிலையங்களிலி ருந்து யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப் பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், அமைச் சர் டக்ளஸ் தேவானந்தாவினால் யாழ். பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கனிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் கைதடி பல்கலைக் கழக மாணவர் விடுதி நலன்புரி நிலையத்தில் இடம் பெற்றது.

இதன் போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் (14ஆம் பக்கம் பார்க்க)

## செங்கல்பட்டிலுள்ள ஈழ அகதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

தமிழ்நாடு செங்கல்பட்டில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் தம்மை உடனடியாக விடு தலை செய்யக் கோரி காலவரையறையற்ற உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். கடல் வழியாக தமிழ்நாடு வரும் ஈழ அகதி களில் விடுதலைப் புலிகளுடன் தொடர் புடை யவர்கள் என்று அதிகாரிகள் சந்தேகிக்கும் நபர்களை செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைத்திருக்கிறார்கள். அத்துடன் தமிழ் நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டிலும் சிலர் அங்கு தடுத்து வைக் கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த மூன்று (14ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அலுவலகம் திறக்கக் கட்டுப்பாடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் விடு தலைப் புலிகள் கட்சியின் புதிய அலுவலகங் களை திறப்பதற்கு அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

கட்சிச் செயற்பாடுகளை விரிவாக்கும் நோக்குடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பல்வேறு இடங் களில் கட்சி அலுவலகங்களைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

திருகோண மலையிலுள்ள கட்சி அலு வலகத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ற பெயர்ப் பலகையை மாட்டுவதற்கு சந் திரகாந்தன் எடுத்த முயற்சி படையினரின் அறி வுறுத்தல்களால் அடுத்து தடுக்கப்பட்டது. அம் பாறை மாவட்டத்தில் இவ்வாறான சம் பவங் களும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சரின் பொது மக்கள் தொடர்பு அலு வலகத்தை திருக்கோவிலில் திறப் பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடை யடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ச-5)

## வடக்கு மாகாண விளையாட்டில் யாழ். மாவட்டம் சம்பியனானது

### இரண்டாம் இடம் வவுனியாவுக்கு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் தடகளத்தில் யாழ்.மாவட்டம் சம்பியனானது. 2009ஆம் ஆண்டிற்கான வடக்கு மா காண விளையாட்டு விழா கடந்த வெள்ளிக் கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்ப மானது.

இதன் நிறைவு விழா நேற்று மாலை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கோலாக லமாக நடைபெற்றது.

இதில் தடகளப் போட்டி களில் யாழ்.மாவட் டம் 151 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத் தைப்பிடித்து சம்பியனா னது.

இரண்டாமிடத்தை 112 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டமும், மூன்றா மிடத்தை 93 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்ட மும் பெற்றன.

இதில் நேற்று நடை பெற்ற தடகளப் போட்டி களின் விபரம்வரு மாறு,

(13ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண விளையாட்டு விழா அடுத்தவருடம் கிளிநொச்சியில்!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுவிழா அடுத்த வருடம் கிளிநொச்சியில் நடைபெறும் என வட மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப் பாளர் ஏ.அண்ணாத்துரை அறிவித்துள்ளார்.


வடமாகாண விளையாட்டுவிழா-2009 இன் இறுதி நிகழ்வு நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதன் போது இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அடுத்த வருடம் விளையாட்டு விழாவை கிளிநொச்சியில் நடத்துவதற்கான ஏற்பாடு கள்யாவும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

**சர்வதேசத்தில் சாதனை வேண்டும்**

வடமாகாண விளையாட்டுவிழாவில் பங்கு பற்றி சாதனை படைத்தவர்கள் சர்வதேச ரீதி யில் சாதனை படைக்க வேண்டும் என வடமா காண ஆளுநர் (14ஆம் பக்கம் பார்க்க)

## வாகன விபத்தில் சிக்கி அமைச்சர் முரளி காயம்



(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளி தரன் விபத்தில் சிக்கி காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றதன் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

எனினும் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரும் அவரது வாகன சாரதியும் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர் பில் மேலும் தெரிய வருவதாவது, (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வெளிநாட்டு சுற்றுலா



வாகன கடன் வசதி



மோட்டார் சைக்கிள் கடன் வசதி



தனிப்பட்ட கணனி வசதி



கையடக்கத் தொலைபேசி வசதி

நன்மைகள்

# வேலை வாய்ப்பு

இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க!



இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான
**யூனியன் அஷ்யூரன்ஸ்** யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத்
தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

## பதவி வெற்றிடங்கள்

- பதவி - 1 காப்புறுதி ஆலோசகர்
- பதவி - 2 தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி - 3 சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி - 4 தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி - 5 சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி - 6 முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பதவி - 7 உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி - 8 முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி - 9 சிரேஷ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர்

அடிப்படைத் தகைமைகள் :- க.பொ.த. (சா/த), க.பொ.த.(உ/த), வியாபாரத் துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள்,காப்புறுதித் துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள், கல்வித் தகைமையுடன் விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள், தற்போது A/L பரீட்சைக்குத் தோற்றிய வர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம். நன்மைகள் :- நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலை வாய்ப்பு (பதவி 6,7,8,9) , பயிற்சிக் காலத்தின் போது மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது?**

- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
- திடசித்தம்

**ஏன் தயக்கம்; தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்**


நேர்முகத் தேர்வு
காலம் :- திங்கட்கிழமை (28.09.2009)
நேரம் :- முற்பகல் 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-3349)

**யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்**

தொடர்புகளுக்கு :- தொ.பே. 021 222 3753, 077 3039582 G.சிறீவரதன் , அபிவிருத்தி முகாமையாளர்


# மரண அறிவித்தல்



பிறப்பு 1948.06.14 இறப்பு 2009.09.20

## நாகன் ஐயாத்துரை

இணுவில் கிழக்கு காரைக்கால் வீதியைச் சேர்ந்த நாகன் ஐயாத்துரை (ஓய்வு பெற்ற ஊழியர்- சீமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S.) 20.09.2009 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், தயாபரன் (C.T.B.), லயாகரன் றேணுகா (சுவிஸ்), கவீஸ்கரன் (சுவிஸ்), மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி, ஜெயவதனி, அரவிந்தன் (சுவிஸ்), சுரேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும்,லௌசிகா, மிதுஷன், தனுஜன், சானுஜன், ஜஸ்மிதா, மதுமிதா, ஹரிஸ்சரண், தார்மீகன், பேராதனா, துவாரகா, நிதுஜா, சௌமியா, பிருந்தா, கிருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.09.2009 காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெறும் என அறியத் தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்,
குடும்பத்தினர்.

(3550)

# இன்று ஒரு தகவல்

## முதல் வணக்கம்

கம்பர் தாம் எழுதிய இராமாயணத்தில் குறிப்பிட்டிருக்கும் ஒரு செய்தியை வைத்துக்கொண்டு, அங்கே என்ன நடந்திருக்கும் என்று பெரியவர்கள் ஊகித்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை இப்போது பார்ப்போம்.

சீதா கல்யாணம் முடிந்தது. மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம். கல்யாணம் முடிந்தவுடனே மண மேடையிலிருந்து இராமரும், அவரைத் தொடர்ந்து சீதாபிராட்டியும் வந்து கொண்டிருந்தனர். கூட்டத்தில் இருந்தவர்கள் "சீதையைத் திருமணம் செய்துகொண்ட இராமர் யாரை முதலில் வணங்கப் போகிறார்?" என்பதைத் தெரிந்து கொள்வதில் அதிக ஆர்வமுடையவராய் இருந்தனர்.

சீதை பின்தொடர இராமர் திருமண மண்டபத்தைச் சுற்றி வந்தபோது, தூரத்தில் தசரதர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் அருகே இருவரும் சென்றனர்.

அதைப் பார்த்ததும், "சரி... தசரதருக்குத் தான் முதல் நமஸ்காரம்" என்று எல்லோரும் நினைப்பார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. இருவரும் தசரதரைத் தாண்டி அப்பால் சென்றனர்.

அடுத்ததாக கோசலை அமர்ந்திருக்கிறாள். அந்தப் பக்கமாக இவர்கள் போய்க் கொண்டிருந்தனர். "ஓகோ... கோசலைக்குத் தான் முதல் வணக்கம், என்று இப்போது நினைத்தனர். ஏனெனில் "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" ஆதலால் தாயாரைத் தான் முதலில் வணங்க வேண்டுமென்று இராமர் நினைக்கிறார் போலிருக்கிறது என்று எல்லோரும் நினைத்தனர். ஆனால் இராமர் தாயையும் தாண்டி அப்பால் செல்கிறார்.

அடுத்தாற்போல் குலகுரு வசிஷ்டர் அமர்ந்திருக்கிறார். "குருவணக்கம் முதலில் என்று இராமர் நினைக்கிறார் என்று எல்லோரும் நினைத்தார்கள். அதுவும் தவறாகப் போயிற்று. இராமர் வசிஷ்டரையும் வணங்காமல் மேற்கொண்டு செல்கிறார்.

இதைப் பார்க்கிறார் விஸ்வாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்காருகிறார். அவர் முகத்தில் பெருமிதம். "அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்ததே நாம் தானே! ஆகவே நம்மிடம் முதலில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்பதற்காகத் தான் இங்கே வருகிறார்கள் போலிருக்கிறது" என்று விஸ்வாமித்திரர் நினைத்தார்.

ஆனால் அவரும் ஏமாந்து விட்டார். இராமரும் சீதையும் அவரையும் தாண்டிச்சென்றனர்.

சரி... அப்படியானால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்கப் போகிறார்கள் ? தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். அவரது காலில் இருவரும் விழுந்து வணங்கினர். யார் அந்த அம்மா? அதுதான் கைகேயி. இராமர் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்த கைகேயி.

கம்பர் தம்முடைய இராமயணத்தில் இராமன் கைகேயியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார். அதை மட்டும் வைத்துக்கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை இப்படி அழகாகப் படம் பிடித்துக் காட்டி, இதற்கு ஓர் அர்த்தமும் கூறியிருக்கிறார்கள்.

அதாவது இராமனின் செய்கை, இராமன் கைகேயியைப் பார்த்து இப்படிச் சொல்வது போல் இருந்ததாம். "என் அவதாரத்தின் இரகசியம் உனக்குத் தெரியும்! சீதையினை இராவணன் தூக்கிக் கொண்டு போக வேண்டும். அதைக் காரணமாக வைத்து இராவணாவதம் நடைபெற வேண்டும்.

எனவே நான் என் பங்கைச் செய்து முடித்துவிட்டேன். இனிமேல் உன் பங்கை நீ செய்ய வேண்டும் எங்களைக் காட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டும். அதற்காகத் தான் உனக்கு முதல் வணக்கம்! என்று சொல்வது போல் இருந்ததாம்.

கம்பர் எழுதிய ஒரு விஷயத்தைப் பெரியவர்கள் எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் பார்த்தீர்களா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய ஆவணமாக்கல் சேவைகள் சபையால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொண்டாடப்படவுள்ள தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக் கிடையிலான புகைப்பட, சிறுகதை, கட்டுரைப் போட்டிகள் புகைப்படப் போட்டி "வளமான வாழ்க்கைக்கு நூல்களை வாசிப்போம்" என்ற கருப்பொருளில் திறந்த போட்டியாக நடத்தப்படவுள்ளது.

இதற்கான கருப்பொருளை பிரதிபலிக்கக்கூடிய வகையில் கலையம்சம் நிறைந்ததாகவும் 10X12 அளவில் கறுப்பு, வெள்ளையாகவோ அல்லது வர்ணத்திலோ அமையலாம்.

அத்துடன்இவ் ஆக்கம் முன்பு காட்சிப்படுத்தப்படாததாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் புகைப்படங்களில் முதலாம் இடம் பெறும் புகைப்படத்துக்கு 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடம் பெறும் புகைப்படத்திற்கு 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் இடம் பெறும் புகைப்படத்திற்கு 10ஆயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கட்டுரைப் போட்டி இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

தரம் 6, 7, 8 மாணவர்களுக்கான கட்டுரை "கல்வியே எதிர்காலத்தில் கைகொடுக்கும்" அல்லது "நூல்களை வாசிப்பதை அபிவிருத்தி செய்வோம்" அல்லது "என்னை கவர்ந்த எழுத்தாளர்" ஆகிய தலைப்பொன்றின் கீழ் 500 சொற்களுக்குக் குறையாமல் அமைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் தரம் 9, 10, 11 மாணவர்களுக்கான கட்டுரை "வளமான வாழ்க்கைக்கு நூல்களை வாசிப்போம்" அல்லது "இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம்" அல்லது "தேசிய அறிவினூடாக புதிய இலங்கை" ஆகிய தலைப்பொன்றின் கீழ் 1000 சொற்களுக்கு குறையாமல் அமைந் திருத்தல் வேண்டும்.

அத்துடன் மார்டின் விக்கிரமசிங்க ஞாபகார்த்தமாக தரம் 12, 13 மாணவர்களுக்கான சிறுகதைப்போட்டி நடைபெறவுள்ளது. சிறுகதைகள் 1000 சொற்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் பெயர் முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுத வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை தலைவர், தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை, இல14, சுதந்திர வழி, கொழும்பு -07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக் கப்பட வேண்டும். (6-4-29)

# இன்று நோன்புப் பெருநாள்

(கொழும்பு)

ஹிஜ்ரி 1430 ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் எந்தப் பாகத்திலும் தென்பட்டதாக ஊர்ஜிதம் செய்யப்படாததால் புனித ரம்ழானை 30 ஆக பூர்த்தி செய்து ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை இன்று திங்கட்கிழமை கொண்டாடுவது என கொழும்பு பெரியபள்ளிவாசல் நிர்வாகமும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் இணைந்து கூட்டாக அறிவித்துள்ளது.

ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை தீர்மானிக்கும் மாநாடு நேற்று முன்தினம் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் அமைந்துள்ள ஹமீதிய்யா மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு பெரியபள்ளிவாசல் பிறைக் குழுத்தலைவரும், மதீனதுல் இல்ம் அரபுக் கல்லூரியின் அதிபருமான மௌலவி உஸ்தாத் ஏ.டபிள்யூ.எம்.ரியாழ் (பாரி), அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா தலைவர் மௌலவி எம்.ஐ.எம் ரிஸ்வி முப்தி ஆகியோர் கூட்டாக இணைந்து ஏகமனதாக உத்தியோகபூர்வமாக இந்தத் தீர்மானத்தை அறிவித்தனர். (6)



யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் நடத்தப்படும் பற்றிக் பிறிண்டிங் பயிற்சி நெறியினை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் மங்கலவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-சாந்தன்)

# இராசி பலன்

21.09.2009
(புரட்டாதி 05 திங்கட்கிழமை)
திருதியை முன்னிரவு 9.30 மணிவரை
சித்திரை பிற்பகல் 2.40 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
றம்ழான் பண்டிகை, சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | மனோ தைரியம், காரிய நன்மை, தனலாபம்,குடும்ப மகிழ்ச்சி. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, ஆரோக்கியம். |
| மிதுனம் | அஜீரணரோகம்,பணக்குறைவு, காரிய தாமதம், தாழ்ந்தசுபாவம். |
| கடகம் | மனச்சஞ்சலம், ரோக நிலை, தொழில் சிந்தை, சுப செலவு. |
| சிங்கம் | நற்கீர்த்தி,காரிய நன்மை, தேக நலன், உறவினர் வருகை. |
| கன்னி | மனோசங்கடம், போசன சுகக் குறைவு, கௌரவக் குறைவு, பணவிரயம். |
| துலாம் | வெகுமானம்,சயனசுகம், போசன நன்மை, நல்ல முயற்சி. |
| விருச்சிகம் | சோம்பல் நிலை, காரிய அலைச்சல், சுபசெலவு,பிறருக்கு உதவுதல். |
| தனுசு | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு,சயனசுகம், முயற்சி கைகூடும். |
| மகரம் | எடுத்த காரியம் கைகூடும், அதிகாரம், நன்கொடை, நல்ல வரவேற்பு. |
| கும்பம் | பயந்த சுபாவம், வேலைச்சுமை, எதிர்பாராத செலவு, ஆரோக்கியக் குறைவு. |
| மீனம் | பொருள் விரயம், முழங்கால் வலி, முயற்சி தாமதம், வீண்பகை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 55 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 65 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 40 |
| தக்காளி | 50 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 45 |
| கோவா | 100 | 120 | -- |
| கரட் | 70 | 80 | 85 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 25 |
| வாழைக்காய் | 20 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 50 |
| பாகற்காய் | 60 | 70 | 40 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 35 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 40 | 50 | 30 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 35 | 45 | 40 |
| கறிமிளகாய் | 25 | 40 | 50 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 65 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 220 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 35 |
| போஞ்சி | 100 | 120 | -- |


# வட மாகாண விளையாட்டு விழா - 2009

## இறுதி நாள் நிகழ்வுகளின் பதிவுகள்






வட மாகாண விளையாட்டு விழா - 2009 இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்படுவதையும் விருந்தினர் கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.





புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் மற்றும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் நிகழ்வில் கலந்து கொண்ட பார் வையாளர்களின் ஒரு.தொகுதியினரையும் படங்களில் காணலாம்.





சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலக கலைஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட கலை கலாசார நிகழ்வுகளை முதலாவது படத்திலும் தேசிய மட்டத்தில் உடற் பயிற்சிப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சியை மற்றைய படத்திலும் காணலாம்.







வட மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் என்.அண்ணாத்துரை, கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வட மாகாண செய லாளர் எல்.இளங்கோவன், யாழ்.அரச அதிபர் க.கணேஷ், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றிய போது ...





வட மாகாண விளையாட்டு விழா - 2009 இல் தடகளப் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்ற வவுனியா மாவட்ட அணியினருக்கு வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து கேடயம் வழங்குவதையும் பெண்களுக்கான மேசைப் பந்து மற்றும் வலைப் பந்து போட்டிகளில் சம்பியன் வென்ற யாழ்.மாவட்ட அணியினருக்கு அரச அதிபர் க.கணேஷ் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

05

பேராசிரியர் கு. சேதுராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

இக்காலத்து ஆடை அணிகலன்கள் மக்கள து ஒப்பனை முறையையும், பொருளாதார நிலையையும் உணர்த்தின. ஆடை அணிகலன்களுக்கு மன்னரும் மக்களும் பெருஞ் செல்வத்தைச் செலவிட்டனர். ஒவ்வொரு சாதியினரும் வெவ்வேறு ஆடை, அணிகலன்களை பெற்றிருந்தனர்.

விசயநகர -நாயக்கர் காலத்து ஓவியங்களில் அக்காலத்தில் வழக்கிலிருந்த ஆடை, அணிகலன்கள் காட்டப் பட்டுள்ளன. இவர்கள் காலத்தில் நெசவுத் தொழில் சிறந்த முறையில் நடைபெற்றது. கைக்கோளர்கள் நெய்து வந்த தறிகளுக்கு வரிகள் போடும் வழக்கம் தொடர்ந்தது. பட்டாடை மூலாயம் என்னும் தறிவரி விசயநகர ஆட்சிக் காலத்தில் வசூலிக் கப்பட் டது.

நெசவுத் தொழில் திறமை பெற்ற செளராஷ்டிர சமூக மக்கள் மதுரையில் குடியமர்த் தப்பட்டிருந்தனர். அரச குலத்தர் பட்டு ஆடைகள், பூக்கள் பின்னப்பட்ட விதவிதமான ஆடைகள் ஆகியவற்றை அணிந்தனர். தாசிகளும், பரத்தையரும் தங்களைப் பல நகைகளாலும், கவர்ச்சி மிகுந்த துணிகளாலும் வண்ணங்களாலும், வாசனைப் பொருட்களாலும் ஒப்பனை செய்துகொண்டனர்.

நாயக்கர் காலத்தில் வாழ்ந்த குமரகுருபரர் பல வகையான அணிகலன்களைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அரைஞான், அரைமணி, அரைவடம், ஆரம், இலைமுகப் பூண், உடைதாரம், ஒட்டியாணம், கச்சை, கலாபம், கழல், கிண்கிணி, குண்டலம், குதம்பை, குழை, கேயூரம், கைவளை, சரி, சன்னவீரம், சிலம்பு, சிறுதொடி, கடிகை, சூடகம், சூழியம், சூலமணி, தமனியக் கொப்பு, தரள உத்தரியம், தலைமாலை, தொடலைக்குறுந்தொடி, தோள்வாளை, நடுநாயக மணி, நித்திலச் சுட்டி, பட்டம், பாடகம், பிறை, புயவலையம், பொட்டு, பொற்குதம்பை, பொற் பட்டம், மகரக் குழை, மகர குண்டலம், மங்கல நாண், மணி முடி, முத்து கச்சு, முத்துக் குதம்பை, முதாரி, முற்றிழை, மேகலை, வாளி முதலியன அவரால் குறிப்பிடப்பட்டவையாகும். தட்டான் பட்டறையில் தாமே முன்னி ருந்து அணிகலன்களைச் செய்விப்பர் என்னும் குறிப்பினைக் குமரகுருபரர் கொடுத்துள்ளார்.

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறி சொல்லியதற்காகக் குறத்தி ஒருத்தி பெற்ற பரிசுகளாகப் பல அணிகலன்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

இவை நாயக்கர் காலத்தில் பெண்கள் அணிந்த அணிகலன்களாகும். அவை சிலம்பு, முறுக் குத் தண்டை, பாடகம், காலாழி, பீலி, அரை ஞாண் கொடி, சதங்கை, கழுத்து சரடுகள், முத்துமாலை, கல் பதித்த தண்டட்டி, முத்து மூக்குத்தி, மயிர் மாட்டி, குப்பி, வங்காளத்தார் கொப்பு போன்றவை யாகும்.

மக்கள் கேளிக்கைகளிலும், விளையாட்டிலும் திருவிழாக்களிலும், ஆடல் பாடல் களிலும் நாட்டம் கொண்டனர். இருவர் சண்டையிடல், வேட்டையாடல், குதிரைப் பந்தயம், சீட்டாடல் போன்ற பொழுது போக்குகளை விரும்பிப் பார்த்தனர்.

நாட்டியம், நாடகம், கோலாட்டம், கும்மி போன்றவை கண்டு களிக்கப்பட்டன. பல்வேறு திருவிழாக்கள் நடந்தன.

நூனிஸ் கருத்துப்படி, பெரும் பான்மையான பணம் கோயில் கட்டுவதிலும், திருவிழாக்களிலும் செலவிடப்பட்டது. செல் வந்தர்கள் அரசரைப் போன்று ஆடம்பரச் செலவு செய்தனர். புனித யாத்திரை மேற் கொண்டு புகழ்பெற்றதும், இயற்கைக் காட்சி கள் நிரம்பியதுமான இடங்களுக்குச் சென்று பொழுது போக்கினர்.

நாட்டில் ஒழுங்கான நீதிமுறையோ, நீதிச் சட்டங்களோ இருக்கவில்லை. நடைமுறையளவில் குற்றங்களுக்குத் தீர்ப்பு வழங்கப் பட்டு தண்டனைகளும் தரப்பட்டன. ஆங்காங்கு ஊர்ப் பெரியோரும், ஊர்ச் சபையோரும் நீதி வழங்கினர். மன்னரின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாக இருந்தது.

இவ்வாறு விசய நகர் -நாயக்கர் காலச் சமுதாயம் வைதீக இந்து சமுதாயமாயிருந் தது. சாதிப் பாகுபாடுகளும், கட்டுப்பாடுகளும் நிறைந்திருந்தன.

சமுதாய வாழ்க்கை வைதீகச் சமயப் பண்பாட்டை எவ்வகையிலும் பாதித்துவிட வில்லை. மக்கள் சாதிப் பாகுபாட்டுடன் செயல் பட்ட போதும் அவர்கள் திருவிழாக் காலங்களில் ஒன்று கூடிச்செயல்பட்டது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

131



1984 இல் றீகன் அதிபராக இருந்த போது மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைக் குறைத்தார். ஒபாமாவின் தலைமையில் மாணவர்கள் அந்த உதவி வெட்டையெதிர்த்து மனுவொன்றை கொடுப் பதற்காக வெள்ளை மாளிகைக்குப் போக ஒபாமாவுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது சக மாணவர்களுடன் சென்று வெள்ளை மாளிகையைப் பார்த்து சில நிமிடங்கள் பிரமித்து நின்றார். அந்த ரம்மியமான மாளிகை எல்லாப் பக்கலிலும் திறந்து கிடந்தது. அண்மையில் நின்ற றோஸ் மலர் பூங்காவையும் அதையடுத்திருந்த மனைகளையும் உற்றுப் பார்க்கக் கூடியதாக இருந் தது.

அமெரிக்க மக்களின் ஜனநாயகப் பாரம் பரியத்தைப் பறைசாற்றி வருவோரை வர வேற்று நின்ற காட்சி ஒபாமாவின் மனதில் பெருமிதத்தை தந்து இறும்பூத வைத்தது. மேலும் தங்கள் தலைவர்கள் தங்களிலும் வேறுபட்டவர்கள் அல்லர். அவர்களும் தங் களைப் போல் சட்டத்துக்குட்பட்டு, தங்கள் ஒட்டுமொத்தமான சம்மதத்துடன் தான் தங்களை ஆளுகிறார்கள் என்ற எண் ணத்தை எடுத்தியம்பி நின்றது வெள்ளை மாளிகை.

இருபது ஆண்டுகளுக்குப் பின் அதாவது 2004 இல் வெள்ளை மாளிகையின் அருகில் செல்வதே முடியாத காரியமாகிவிட்டது. காவல் அரண்கள், ஆயுதம் தரித்த காவலர்கள், வான்கள், உருவங்களைக் காட்டும் கண் ணாடிகள், மோப்ப நாய்கள் என்றும் நீக்காத தடைகள் ஆகியன வெள்ளை மாளிகையைச் சுற்றிப் போடப்பட்டிருந்தன. அங்கீகாரமற்ற கார்கள் அருகிலுள்ள பென்சில்வேனியா அவென்யுவுக்குள் நுழைய முடியாது.

ஜனவரி மாதம் கடும் குளிர். ஒருநாள் மாலை. ஒபாமா செனட்டராகப் பதவிப் பிரமாணத்துக்கு முதல் நாள், அவரின் கார் வெள்ளை மாளிகையின் கேற்றுகளைத் தாண்டி உள்ளே செல்லும்போது ஏதோ ஒன்றை தொலைத்துவிட்ட, இழந்துவிட்ட உணர் வோடு தான் உள்ளே நுழைந்தார்.

ஒபாமாவை வரவேற்ற வெள்ளை மாளிகை அதிகாரி அவரை பொன் அறைக்கு (Gold Room) அழைத்துச் சென்றார். புதிய செனட் அங்கத்தவர்களும் மக்களவை அங்கத்தவர் களும் அங்கே ஏற்கனவே வந்துவிட்டார்கள்.

சரியாக மாலை 2 மணிக்கு அதிபர் புஷ் கம்பீரமாக வந்து சேர்ந்தார். பத்து நிமிடங்கள் அவர் அறையிலிருந்தவர்களை நோக்கி விகட மாகக் சில வார்த்தைகள் பேசினார். அதன் பின் எல்லோரையும் தேநீர் சிற்றுண் டிக்கும் அதைத் தொடர்ந்து போட்டோ எடுக்க வும் ஏற்பாடாகியிருந்தது.

சிற்றுண்டிச்சாலையில் அதிபர் புஷ் தனது இரண்டாவது ஆட்சியில் தான் முன்னெடுக் கப் போகும் நிகழ்ச்சி நிரல் பற்றி விளக்கினார்.

ஈராக் யுத்தம், சமூக காப்புறுதிச் சட்டத் திருத்தம், வரிச் சீர்திருத்தம் என்பன பற்றி தொட்டுச் சென்றது அவரின் சிற்றுரைகள். விருந்தினர்கள் பலரும் அவரை வாழ்த்தி விடைபெற்றனர். நீலஅறை (Blue Room) க்குத் திரும்பிவிட்டார் புஷ்.

அப்போது 'ஒபாமா' என்ற குரல்கேட்டு திரும்பியபோது அதிபர் புஷ் வாசலில் நின்றுகொண்டு ''வாருங்கள் லோராவைச் சந்தியுங்கள்' என்றழைத்தார். தன் மனைவியிடம் திரும்பி '' லோரா! அன்று ரி.வியில் பார்த்த ஒபாமா இவர்தான். அழகிய குடும்பம். உங்கள் மனைவி வசீகரமானவர்'' என்று வேறு சொல்லி வைத்தார். நாட்டின் முதல் பெண்ணான லோராவுக்கு கைலாகு கொடுத்து அவர்களைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி கூறினார் ஒபாமா.

அதன்பின் ஒபாமாவை அருகில் உள்ள அறைக்கு அழைத்துச் சென்று தனிமையில் இருவரும் உரையாடினர்.

"நான் உங்களுக்கு தரப்போகும் சிறிய அறிவுரையை ஏற்றுக்கொள்ளுவீர் என்று எண்ணுகிறேன். உங்களுக்கு நல்ல பிரகாசமான எதிர்காலம் ஒன்று காத்திருக்கிறது. இங்கு சிலகாலம் இருந்தபடியால் சொல்லு கிறேன். மிகவும் கரடுமுரடான இடம். உங் களுக்குக் கிடைக்கும் ஆதரவும் அக்கறையும் பற்றி அவதானமாக இருக்கவேண்டும். உங் களை வேட்டையாட, குற்றம்காண முனைவார் கள். எனது பக்கத்திலிருந்து மாத்திரமல்ல, உங்கள் கட்சிக்காரரிடமிருந்தும் வரலாம். எப் போது உங்கள் கால்கள் சறுக்கும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருப்பார்கள். நான் சொல் வது விளங்கும் தானே! ஆகவே மிகக் கவன மாக விழிப்புடனிருக்க வேண்டும் என்று சொல்லி வைத்தார். பின் தன் பணியைத் தொடர வேறிடம் ஏகினார்.

ஒபாமா செனட் சபைக்கு வந்த நாட்களி லிருந்து புஷ்ஷின் ஆட்சியைத் தொடர்ந்து பயங் கரமாக விமர்சித்து வந்தார். பணம் படைத்தவர் களுக்கு மாத்திரம் வரிச் சலுகை செய் தார். அது வரி -பாதீட்டு முறையில் பாரதூரமான பொறுப் பின்மையான விடயம் என்று கண்டித்தார்.

### ஜம்பொன்

மேலும் ஆத்மார்த்தமாக மனதுக்கு வருத் தம் தருவது .சுகாதாரத்தையிட்டு எந்தப் பயன் தரும் செயல் திட்டங்களும் இல்லையென் பதைச் சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் கொள்கை அமெரிக்காவின் பொருளாதாரத்தை ஏனைய நாடுகளுடன் போட்டிபோடக் கூடியதாக மாற்றியமைக்க எந்த உபாயங்களும் முன்வைக்கப்படாமை என்பன பற்றி புஷ்ஷைச் சாடினார்.

2002 இல் ஒரு பிரசாரக் கூட்டத்தில் ஈராக் கிடம் பரம்பலாக மக்களைக் கொன்றொழிக் கும் ஆயுதங்கள் இருந்ததற்கான தடயங்கள் ஏதுமின்றி அதன் மேல் படையெடுப்பது உயர் ந்த விலை கொடுத்து எடுக்கப்படும் இமாலயத் தவறு என்று வாதிட் டார். இன்று அது எவ்வளவு தீர்க்க தரிசனமாகியது என்பது உலகமறிந் ததே. (தொடரும்)

# அகராதிகளின் தோற்றமும் அவற்றின் ஆற்றுகைகளும்

நாள்தோறும் அறிவைப் பெருக்கிக் கொள்ள ஆர்வம் பெருகி வருகின்றது. அறிவு வளர்க்கும் செவிலியாக ஒவ்வொரு மொழியும் விளங்குகின்றது. மொழி வளர்ச்சியை அளந்து காட்டும் அளவுகோலாக அகராதிகள் அமைகின்றன. தமிழ்ச் சொல்லின் பொருளைத் திட்பமாக அறிந்து கொள்ளல் ஒரு அரிய செயலாகும். அவ்வரிய செயலை எளிய செயலாகவும், இனிய செயலாகவும், பயனுடைய செயலாகவும் செய்யவல்லவை அகராதிகள். சொற்களை அகர வரிசைப் படுத்திப் பொருள் விளக்கம் தரும் நூலை அகராதிகள் என்றும் அகர முதலி என்றும் குறிப்பிடுவார்.

அகராதி என்பது நோக்கு நூல் ஆகும். இது ஒரு மொழியிலுள்ள சொற்களைத் தொகுத்தளிக்கின்றது. பொருள் விளக்கம் , ஒலிப்பு முறை , எழுத்து வடிவநிலை, ஒப்புமைச் சொற்கள், இலக்கணக்குறிப்பு, பிறப்பியல் நிலை போன்ற செய்திகளை அளித்து மக்களின் அறிவைப் பெருக்கித் தக்க பொருளைக் கண்டறிய உதவுகின்றது.

அகராதி என்பதை அகராதிவாணர் சாமுவேல் ஜான்சன் (samuel johnson 1746) கூறும் போது "பயன்பாட்டின் அடிப்படையிலேயே அகராதியை மதிப்பிட வேண்டும் என்றும் திறனாய் வாளருக்கு இன்பமூட்டுவது மட்டுமன்றி கற்போர்க்கு அறிவுறுத்தவும் வேண்டும் என்கின்றார்".

இன்னொரு ஜேர்ம மொழியிலாளரும் இலக்கணியும் அகராதிக்கலை நிபுணருமான ஜேகோப் கிரிம் (jacob Greem) அகராதி என்பது பரந்த தொரு பெருநோக்குக்கொண்டதாக அமைய வேண்டும் என்று கூறுகின்றார். சொல்லிற்குப் பொருள் கூறும் முயற்சியே முதன் முதல் அகராதி தோன்றுவதற்கு காரணமாகும். ஒரு மொழியில் வெளிவந்துள்ள அகர முதலிகள் அம்மொழி எந்தெந்தத் துறையில் சொல்வளம் பெற்றிருக்கின்றது ; இன்னும் எந்தெத்ததத் துறையில் சொல்வளம் பெறவில்லை என்பதைக் காட்டிவிடும்.

கி.மு 700 அளவில் மெசபதேமியாவில் சில அக்கேடிய (Akkadion) சொற்களுக்குப் பொருள் சுட்டிய எழுத்துச் சான்று கிடைத் திருப்பதாகவும் அதுவே உடலக முதல் அகராதிக்கு வித்து எனவும் கூறுகின்றனர். அதற்குச் சமகாலத்திய தொல்காப்பியத்தில் உரிச்சொல் பகுதி அப்பொருள் சுட்டியதே என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி 1225 இல் Dictionarius என்ற சொல்லை இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன்ஸ் திகலந்தியா (Joannes de Galendia) என்பவர் இலத்தீன் சொல்வரிசையைக் குறிக்கப்பயன்படுத்தினார்.

இலத்தீன் சொல் மூலத்திலிருந்து தோன்றிய Dictionary என்பது கருவி நூல் என்னும் பொருளில் வழங்கியது. கிரேக்கச் சொல் மூலத்திலிருந்து பிறந்த Lexicon என்பது சொற்புத்தகம் (word book) என்னும் பொருளில் வழங்கியது. நாளடைவில் இரண்டு சொற்களும் அகர முதலியைக் குறிக்கத் தொடங்கின.

ஆங்கிலத்தில் அகரவரிசைப்படுத்தப் படும் நூல் வரிசைகள் பின்வருமாறு

சொற்கோவை - Concordance
சொல்லடைவு - Glossory
அகரவரிசை - Vocabulary
சொற்பட்டி - Index
அகராதி - Lexicon
அகரமுதலி - Dictionary
திணைக்களஞ்சியம் - Gazotteer
சொற்களஞ்சியம் - Thesaurus
கலைக்களஞ்சியம் - Encyclo paedia

போர் வீரனுக்குச் செவ்விய படைக் கலங்கள் வெற்றிக்குத் துணைபுரிவது போல பல்வேறு துறைகளில் அறிவை வளர்த்துக்கொள்ள விளையும் அம்மொழி யினருக்கும் அம்மொழியில் அவ்வத்துறை தொடர்பான கலைச்சொற்கள் பெரிதும் துணை நிற்கும் . தாய்மொழியே கல்வி வாயிலாக அமையும் நிலையில் தாய் மொழியின் வெற்றிக்கும் பற்றுக்கும் தாய் மொழியில் ஊற்றாய்ப் பெருகும் சொல் வளம் மிகவும் இன்றியமையாதது . அத்தகு சொல்வளக் களஞ்சியமாக அகர முதலிகள் விளங்கும்.

அகராதி வகைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்,

♦ சொல்லுக்குப் பொருள் கூறுவதோடு அச்சொல் எந்த வேரிலிருந்து எப்படிப் பிறந்து உருவாயிற்று என்பதும் அது பேச்சு வழக்கிலோ அல்லது செய்யுள் வழக்கிலோ வந்துள்ள தொடரும் அது எடுத்தாளப்பட்டுள்ள நூலின் பெயரும் நூலில் அது வந்துள்ள உட்பிரிவின் பெயரும் இத்தனையாவது பாடல் எனப் பாடல் எண்ணும் இன்னபிறவும் கொடுக்கப்பட்டிருக்கும் அகராதிகள்.

♦ மின்சாரம், பொறிகள் என்பன போன்ற குறிப்பிட்ட பொருள்களைப் பற்றியும் , உழவு நெசவு போன்ற குறிப்பிட்ட தொழில்களைப் பற்றியும் உள்ள சொற்கள் மட்டும் அவற்றின் தோற்றத்துடன் பொருள் கூறப்பட்டிருக்கும் தனித்துறை அகராதிகள் .

♦ சரியான இலக்கிய வழக்கிலிருந்தும் பொருத்தமான ஒலியிலிருந்தும் (உச்சரிப்பிலிருந்தும்) வேறுபட்டு நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு வழங்கப்படும் வட்டார வழக்குச்சொற்கள் மட்டும் அகரவரிசையில் பொருள் கூறப்பட்டிருக்கும் வழக்கு அகராதிகள் (Dialects)

♦ நூலின் இறுதியில் அல்லது முதலில் அந்நூலிள்ள செய்யுட்களில் முதலிலுள்ள சொற்களையெல்லாம் திரட்டி அகர வரிசையில் கொடுக்கும் செய்யுள் முதற்குறிப்பகராதி

நூலின் உட்தலைப்புக்களைக் கூறும் பொருளடக்க அகராதி .

♦ ஒரு நூலிலுள்ள அருஞ்சொற்களை மட்டும் பொருளுடன் அந்நூலின் இறுதியில் தந்திருக்கும் அருஞ்சொல்லகராதி .

♦ ஒரு நூலிள்ள சொற்கள் அனைத்தையும் நூலில் வந்துள்ள இடஞ்சுட்டும் தனி நூல் அகராதி .

♦ ஒரு நூலிலுள்ள இன்றியமையாச் சொற்களை மட்டுமோ அல்லது பொருள் களை (செய்திகளை ) மட்டுமோ நூலில் வந்துள்ள அடி இடம் சுட்டிக்கொடுத்துள்ள சிறப்பகராதி. (Con Cardance) இவ்விரு வகையுள் சொற்கள் கொடுக்கப்பட்டிருப்பது சொற்கோவை அகராதி (Verbal Concordance) எனவும் பொருள்கள் கொடுக்கப்பட்டிருப்பது **பொருட் கோவை அகராதி** (Real Concordance எனவும் அழைக்கப்படும்.

♦ பல்வகைக் கலைத்துறை -அறிவுத்துறை பற்றிப்படங்களுடன் கூடிய அருஞ் சொல் விளக்க அகராதி (Glossary).

♦ உலகச் செய்திகள் - பொருள்கள் அனைத்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ள கலைக்களஞ்சியம் (Encyclopaedia).

♦ ஒரு மொழிச் சொல்லுக்கு நேரான வேறு ஒரு மொழிச் சொல்லோ அல்லது பல மொழிச் சொற்களோ கொடுக்கப்படும் மொழியகராதி வகைகள்.

♦ மேலுள்ளவையேயன்றி ஒரு மொழியிலே வழங்கும் பழமொழிகளை எல்லாம் அகர வரிசையில் தொகுத்த பழமொழியகராதி.

♦ ஒரு மொழி வல்ல புலவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை அகரவரிசையில் தரும் புலவர் அகராதி.

♦ இரு சுடர் , முக்குணம் , ஐம்பொறி எனத் தொகை யெண்களால் சுட்டப்படுவனவற்றை விளக்கும் தொகையகராதி.

♦ அகம், முகம், இன்னல், கன்னல் , தின்னல் போன்ற செய்யுட கேற்ற எதுகைத் தொடைச் சொற்கள் தரப்படும் தொடைய கராதி.

♦ அரம் -அறம், குலம் -குளம், மணம் - மனம் என்பன போன்ற ஒப்புமையுடைய ஓரெழுத்து வேறுபாடுடைய சொற்கள் தரப்பட்டுள்ள எழுத்து வேறுபாட்டகராதி.

இவைமட்டுமன்றி,
ஒரு மொழியகராதி,
இரு மொழியகராதி,
பன்மொழியகராதி,
ஒலிப்பொழுங்கு அகராதி pronunciation),
சித்திர அகராதி ,
குழந்தைகளின் அகராதி,
மாணவர்அகராதி,
புதிர்ச் சொல் அகராதி,
விடுகதை அகராதி,

கையடக்க அகராதி எனப் பலவகை அகராதிகள் உள்ளன. பொருள் தெரிந்து அதற்குரிய சொல் தெரியாதவர்களுக்காகப் பொருட்பாட்டு அகராதி (Meaning Dictionary) கூட ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளது. இன்னும் என் னென்ன பயன்பாட்டு நோக்கில் அகராதிகள் வெளிவரும் என்று கணிக்க இயலாது.

அகராதிகளின் தேவையோ பயனோ அதிகம். ஆனால் அதனை அறிந்தவர் பயன்படுத்துபவர் சிலர் அகராதி பற்றி ஆராயும் இயல் அகராதிக்கலை எனப்படும். காலத்தின் கட்டாயத்திற்கேற்ப சொற்களின் தேவை பெருகிக்கொண்டே செல்கின்றது.


சொல்வளம் தாய் மொழியில் இல்லாவிடின் வேற்று மொழியையே தன் அறிவு வளர்ச்சிக்குத்துணை கொள்ள நேரும் . தாய் மொழியின் பால் பற்றுக்குறைபடும். நல்ல அகராதிகள் மக்களைச் சிறந்த மொழிப்பாங்குடைய வராக மாற்றும்.

எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்ற களமாக விளங்குவது அகராதி களஞ்சியம் போன்ற துறைகள் விளங்குகின்றன. இவற்றிற்கு மூலாதாரமாக அகராதிகளின சொல்வளம் பெருகிக் கொண்டேசெல்லல் வேண்டும். இதற்குக் காலமும் களமும் தகுந்தவையாக அமைய வேண்டும்.


மதுரா பரமேஸ்வரன்
உதவி விரிவுரையாளர்
மொழியியற் துறை


## தமிழ் மக்கள் முன் எப்போதையும் விட இன்று பிரச்சினைகளை அனுபவிக்கிறார்கள்

### எஸ்.பி. திசநாயக்க



(கொழும்பு)

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் முன் எப்போதையும் விட இப்போது அரசியல் பண்பாட்டு மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் எஸ்.பி.திச நாயக்க தெரிவித்துள்ளார். மற்றொரு போரைத் தவிர்ப்பதற்காக அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் மதத் தலைவர்களும் வர்த் தக சமூகத்தினரும் ஏனையோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது.

வெற்றி கொள்ளப்பட்ட போர் கடந்த 30 ஆண்டுகளாக வடக்கு கிழக்கில் மட்டுமே நடந்து வந்தது. அரசியல் பண்பாட்டு சமூகப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை எனில் போர் இந்தப் பகுதிகளுக்கும் இனிவரும் காலங்களில் விரிவாகிவிடும்.


அரசியல் கட்சிகளும் மதத் தலைவர்களும் ஏனையவர்களும் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் அத்துடன் வடபகுதி மக்கள் ஆயுதங்களைத் தூக்குவதைத் தடுக்கும் வகையில் ஒரு தீர்வை அவர்கள் காண வேண்டும்.

பலம் மிக்கதாகவும் பணக்கார நாடாகவும் இலங்கை மீண்டும் ஒரு தடவை அபிவிருத்தி செய்யப்படவேண்டும் இதுதான் இன்று எமக்கு முன்பாக உள்ள மிகப் பெரியசவால் மற்றையவர்களின் பங்களிப்பு இன்றி அரசு மட்டும் செய்து முடிக்க இயலாது.

விரைவிலேயே இந்த நாடு சரியான பாதையில் இட்டுச் செல்லப்பட வேண்டும் நாட்டைச் சரியான பாதையில் நடத்திச் செல்ல திறந்த மனதுடன் விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவர் வேண்டும். மக்கள் எல்லா விடயங்களையும் கவனமாக மதிப்பிட்டுப் புரிந்து கொள்ள வேண்டும் புத்தர் போதித்த தர்மத்தை மீண்டும் ஒரு தடவை யாராவது செய்ய வேண்டும். இவ்வாறு அவர் மேலும் கூறினார்.(6)

## புலிகள் தனிநாட்டுப் பிரகடனம் செய்யும் முனைப்பில் இருந்தார்கள்

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

சொந்த நிர்வாகம், வங்கிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின்ஆதரவு என விடுதலைப்புலிகள் தனி நாடு ஒன்றிற்கான கட்டமைப்புக்களைக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ள ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தனி நாடு ஒன்றைப் புலிகள் விரைவில் அறிவிப்பதற்கான முனைப்பில் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் புத்த பிக்குகள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், புலிகள் சொந்த நிர்வாகத்தைக் கொண்டிருந்தார்கள். வங்கிகளை உருவாக்கி இருந்தார்கள். தமக்கு ஆதரவான அரச சார்பற்ற நிறுவனங்களைக் கொண்டிருந்தார்கள்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவிகளுடன் தனியான நாடு ஒன்றைப் பிரகடனப்படுத்துவதை நோக்கி அவர்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படிச் செய்வதற்கு முன்னர் நாங்கள் அவர்களைத் தோற்கடித்துவிட்டோம்.

ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் நாட்டிற்கு வருகை தந்திருந்த சமயத்தில், தமது உயிருக்கு ஆபத்து இருப்பதாக சில தனிப் பட்ட நபர்கள் செய்தித்தாள்களில் பணம் கொடுத்து விளம்பரங்களை கொடுத்திருந்தார்கள்.

வருகை தரும் ஐ.நா.அதிகாரிகள் அந்த விளம்பரத்தைப் படிக்கவேண்டும் என்பதே அவர்களின் உள்நோக்கம்.யாரெல்லாம் அந்த விளம்பர அறிக்கையில் கையெழுத் திட்டிருந்தார்கள் என்ற விபரம் என்னிடம் உண்டு.

நாட்டின் மீதுதடைகளை விதிப்பதற்கான முயற்சிகளை எதிர்க்கட்சித் தலைவர் கூட மேற்கொண்டார்.

அவர் அரசின் எதிர்த்தரப்பாக நடந்து கொள்ளாமல் நாட்டை எதிர்க்கும் நபராக நடந்து கொள்கிறார் என்றார். (6)

# உலகத்தமிழர்கள் மீது பழிபோட்டு எனக்கு ஒரு முடிவு கட்டச் சதி

## கருணாநிதி தெரிவிப்பு



(சென்னை)

எனக்கு ஒரு முடிவு கட்ட, பழ. நெடுமாறன் கோஷ்டியினர் திட்டமிட்டுள்ளனர் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

முதல்வர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் முதல்வரின் செயற்பாடுகள் குறித்து வெளிநாடு வாழ்ந்த தமிழர்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

நெடுமாறன் கோஷ்டியினரின் உள்நோக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

உண்மைக்கு மாறான, தகவல்கள் நெடுமாறன் மூலம் வெளியிடப்பட்டிருக்கின்றன. எனக்கு ஒரு முடிவு கட்ட திட்டமிட்டு, அந்தப் பழியை உலகத் தமிழர்கள் யார் மீதாவது போட்டுவிட்டு,தாங்கள் தப்பித்துக்கொள்ள, அந்தக் கோஷ்டியினர் முன்கூட்டியே திட்டமிட்டு செய்யும் பிரசாரம் என்று நான் கருத வேண்டியிருக்கிறது.

நெடுமாறன் போன்றவர்களுக்கு, ஜெயலலிதாவின் செயற்பாடுகள் தான் பிடிக்கும். ஜெயலலிதாவைப் போல், அவரைப் பிடித்து குண்டர் சட்டத்திலோ அல்லது பொடா சட்டத்திலோ மாதக் கணக்கில் சிறையில் தள்ளினால், அதுதான் சிறந்த நடவடிக்கை என்பர்.

எப்படியிருந்தாலும், வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன் இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார். (6)

# மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து டில்லியில் விஜயகாந்த் உண்ணாவிரதம்

(சென்னை)


இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து, டில்லியில் எதிர்வரும் 29 ஆம் திகதி விஜயகாந்த் தலைமையில் தே.மு.தி.கவினர் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இராமேஸ்வரம் கடற்பகுதியில் 16 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 21 பேரை, இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிக் கட்டையால் தாக்கி கடத்தியுள்ளனர். மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தியும், வலைகளை அறுத்தும், மீன்பிடி சாதனங்களைக் கடலில் எறிந்தும் காட்டுமிராண்டித்தனமாக நடத்துள்ளனர்.

இலங்கை அரசுடன், மத்திய அரசு 1974 இல் செய்து கொண்ட கச்சதீவு ஒப்பந்தமே இத்தனை சிக்கல்களுக்குக் காரணம்.

தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீது இலங்கை அரசு தாக்குதல் நடத்துகிறது என்றால், தமிழர்கள் இளிச்சவாயர்கள் என்று கருதுகிறதா?



இலங்கை அரசின் போக்கு, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தையே பறித்துவிட்டது.

கடலோர மீனவர்கள் என்ற இனத்தையே அழித்து வருகிறது. முதல்வர் கருணாநிதி அவ்வப் போது மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதும், இலங்கை அரசிற்கு கண்டனம் தெரிவிப்பதுமான கண் துடைப்பு வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்.

மத்திய அரசோ தமிழக மக்களைப் பற்றி சிறிது கூட அக்கறையில்லாமல் மெத்தனப் போக்கைக் கையாண்டு வருகிறது.தே.மு.தி.க. சார்பில் எனது தலைமையில், டில்லியில் வரும் 29 ஆம் திகதி ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடக்கிறது. இவ்வாறு விஜயகாந்த் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# தாஜ்மகாலுக்கு கண்ணாடி கவசம் தொல்லியல் துறை ஆலோசனை

(லக்னோ)

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலுக்கு கண்ணாடி கவசம் அமைக்க தொல்பொருள் ஆராய்ச்சித்துறை ஆலோசித்து வருகிறது. முகலாய மன்னர் ஷாஜகான் தன்னுடைய மனைவி மும்தாஜுக்காக அமைத்த தாஜ்மகால் உலக அதிசயங்களில் ஒன்றாக இன்று வரை போற்றப்படுகிறது.

தாஜ்மகாலை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பளிங்கு மாளிகையின் பளபளப்பு குன்றிவந்ததால் ஆக்ராவில் உள்ள நூற்றுக்கணக்கான சிறு தொழிற்சாலைகள் அகற்றப்பட்டுவிட்டன. தாஜ்மகாலை சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் கரி அடுப்பு பயன்படுத்தக்கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது. தாஜ்மகாலை பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகள் பளிங்குக் கல்லை தொட்டுப் பார்ப்பதால் சில இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே பார்வையாளர்கள் இதைத் தொட்டு பார்ப்பதை தடுக்க கண்ணாடி கவசம் அமைக்க ஏற்பாடு செய்யும்படி தாஜ்மகால் பாதுகாப்புத் துணை அதிகாரி முனாசர்அலி தொல்லியல் துறை மண்டல இயக்குனர் பிரதாப்பானு சிங்குக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து பிரதாப்பானு குறிப்பிடுகையில், தாஜ்மகாலை தூரத்திலிருந்து ரசிக்கும் வகையில் மரத்தாலான தடுப்பு போடப்பட்டுள்ளது. இருப்பினும் சிலர் அதையும்



தாண்டி வந்து தொட்டுப் பார்ப்பதால் சேதம் ஏற்படுகிற்து. இந்த சேதங்களை சரி செய்ய 40 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தாஜ்மகாலை பாதுகாக்க கண்ணாடிக் கவசம் அமைப்பது குறித்து ஆலோசனை செய்து வருகிறோம் என்றார். (6)

# பட்டுக்கோட்டையில் பாத யாத்திரை

ஈழத்தமிழர் நலனுக்காக பட்டுக் கோட்டையில் ஆர்.சி. தேவாலய அருட்தந்தை ஆரோக்கியராஜ் தலைமையில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட ஆயிரம் பேர் 1 மணி நேரம் பாதயாத்திரை நடத்தினர்.

ஆர்.சி தேவாலயத்தில் தொடங்கி தஞ்சாவூர் சாலை வழியாக சென்று பேருந்து நிலையத்தை அடைந்தனர். (6)

# சர்ச்சைக்குரிய பேச்சால் சசிதரூரின் அமைச்சர் பதவிக்கு சிக்கல்

(புதுடில்லி)

அரசின் சிக்கன நடவடிக்கை பற்றி சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த சசிதரூரின் மீது சரியான நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இதனால் சசிதரூரின் அமைச்சர் பதவிக்கு சிக்கல் ஏற்பட்டுள் ளது.

நாட்டில் நிலவும் வறட்சியைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு சார்பில் சிக்கன நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக மத்திய அமைச்சர்கள் விமானத்தில் செல்லும் போது சொகுசு வகுப்பில் பயணிக்காமல் சாதாரண வகுப்பில் பயணிக்க வேண்டுமென காங்கிரஸ் செயற்குழு யோசனை தெரிவித்தது. இதை மத்திய அமைச்சர்கள் பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த வெளியுறவு இணை அமைச்சர் சசிதரூர் விமானத்தில் சாதாரண வகுப்பில் பயணிப்பது மாட்டுத் தொழுவத்தில் பயணிப்பது போன்றது எனக் கூறியிருந்தார்.

இதற்கு எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல் காங்கிரசும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. எதிர்ப்பு அதிகரித்ததை அடுத்து சசிதரூர் மன்னிப்புக் கேட்டுள்ளார்.



சசிதரூர் மன்னிப்பு கேட்டாலும் காங்கிரஸ் இந்த விஷயத்தை அத்தனை எளிதாக எடுத்துக் கொள்ளாது என்றே தெரிகிறது. ராஜஸ்தான் முதல்வரும் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவருமான அசோக் கெலாட் சசிதரூர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் மனீஷ் திவாரி கூறுகையில்,

அரசின் சிக்கன நடவடிக்கை குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்கள் கண்டனத்துக்கு உரியது. அதை வெளியிட்ட அமைச்சர் சசிதரூர் மீது சரியான நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதனால் சசிதரூரின் அமைச்சர் பதவிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. (6)

# தற்கொலை படை தாக்குதல்; பாகிஸ்தானில் 44 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் மசூதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில்,சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த மேயர் ஒருவர் உயிரிழந்தார். அதற்கு ஒரு மணி நேரத்திற்குப் பின், ஷியா முஸ்லிம் பிரிவினர் ஆதிக்கம் நிறைந்த கிராமத்திற்கு அருகில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப் படைத்தாக்குதலில்,44 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து பொலிஸ்காரர் ஒருவர் கூறியதாவது,பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில், ஹங்கு பகுதி மசூதி ஒன்றில், மேர்கான் அப்சல், பிரார்த்தனை செய்து கொண்டிருந்த போது, எட்டுகிலோ எடையுள்ள வெடிகுண்டு வெடித்தது. பலத்த காயமடைந்த கான் அப்சல், மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.அவரது குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் காயமடைந்தனர்.

ஒரு மணிநேரத்திற்குப் பின், நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள உஸ்தர்சாய் கிராமத்தில் உள்ள சந்தைப் பகுதியில் கார் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.இச்சம்பவத்தில், 44 பேர் உயிரிழந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பால், அப்பகுதியில் உள்ள ஹிமத் அலி ஓட்டல் உட்பட பல கட்டங்கள் சேதமடைந்துள்ளன.இந்த இரண்டு குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்துத் தெரியவில்லை. குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு, லஷ்கர் -இ-ஜாங்வி அல் அமி என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக உள்ளூர் செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.இந்த அமைப்பிற்கு, தலிபான் மற்றும் அல் -கொய்தாவுடன் தொடர்புடைய தடைசெய்யப்பட்ட சன்னி பிரிவினரின் அமைப்பான லஷ்கர் - இ -ஜாங்கிவியுடன் தொடர்பிருக்க வாய்ப்பு உள்ளது என்றார். (6)

# சூரிய மண்டலத்துக்கு வெளியே பாறையிலான முதல் கிரகம் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

சூரிய மண்டலத்துக்கு வெளியே பாறையிலான முதல் கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சூரிய மண்டலத்தில் பூமியில் மட்டும் தான் மனிதர்கள் வாழ்கிறார்கள். ஆனால், மற்ற கிரகங்களிலும் உயிரினங்கள் இருக்கலாம் என்ற எண்ணம் விஞ்ஞானிகளுக்கு இருக்கிறது.இதனால் வேறு கிரகங்களில் உயிரினம் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான தேடும் படலத்தை விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். சூரிய மண்டலத்துக்கு வெளியே 300க்கும் மேற்பட்ட கிரகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். ஆனால் அவை உறுதியில்லாதவை. உயிரினம் உயிர் வாழ வேண்டுமானால் உறுதியான தரைப்பகுதி இருந்தால் தான் முடியும். 300க்கும் மேற்பட்ட கிரகங்களும் வெறும் வாயுவால் ஆனவை.

சமீபத்தில் ஐரோப்பிய விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் உறுதியான பாறை வடிவிலான ஒரு கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இது சூரிய மண்டலத்துக்கு வெளியே உள்ள முதல் பாறை கிரகம் ஆகும்.பாறை வடிவிலான கிரகம் கண்டு பிடித்திருப்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.இதற்கு கோரோட் -7 டி என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

நாம் கண்டுபிடித்த கிரகங்களிலேயே பூமி மாதிரி இருப்பது இந்தக் கிரகம் தான் என்று ஜெர்மனியில் உள்ள துரிங்கர் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் டைரக்டர் ஆர்ட்டி ஹார்ட்செஸ் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இந்தக் கிரகம், சூரியனுக்கு மிக அருகில் இருக்கிறது. இதனால் இந்தக் கிரகத்தில் வெப்பநிலை 3600 டிகிரி பரனைட் ஆகும். இது தன் நட்சத்திரத்தை 20 மணி நேரத்துக்கு ஒரு முறை சுற்றி வருகிறது. மணிக்கு 466 ஆயிரம் மைல் வேகத்தில் இது சுற்றி வருகிறது.

சூரிய மண்டலத்தில் சூரியனுக்கு மிக அருகில் உள்ள புதன்கிரகம் சூரியனைச் சுற்றி வர 88 நாட்கள்ஆகிறது என்றார். (6)

# கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகப் பணியாளர்கள் மேலும் ஒரு தொகுதியினரின் சுயவிபரக்கோவை மீட்பு

*கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து கல்வி சார், கல்விசாரா ஊழியர்களின் சுயவிபரக் கோவைகள் மேலும் ஒரு தொகுதி மீட்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்தார்.*

*ஏற்கனவே கடந்த 17,18,19 ஆம் திகதிகளில் வலம்புரியில் வெளிவந்த ஆயிரத்து 616 கல்வித்துறையினரின் சுயவிபரக் கோவைகளுடன் தற்போது மேலும் ஒரு தொகுதி சுயவிபரக் கோவைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போது மீட்கப்பட்ட சுயவிபரக்கோவைகளின் விபரம் வருமாறு,*

**வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்**

திருமதி கே.ஜெகதீஸ்வரி, செல்வி கணேசன் தமிழ்ச்செல்வி, செல்வி ப.பத்மலோஜினி, செல்வி ஐயாத்துரை தெய்வராணி, வேலுப்பிள்ளை பாஸ்கரன், திருமதி அருள்மலர் இராஜேந்திரம், திருமதி ச.டியூத் அருள்மலர், சி.பாலசுப்பிரமணியம், செல்வி ந.கவிதா.

**பளைக்கோட்டம்**

**கிளி/பளை மத்திய கல்லூரி**

பு.குமணன், திருமதிதேவகி மனோகரன், டொன்பொஸ்கோ.

**கிளி/ முகாவில் அ.த.க.பாடசாலை**

செல்வி சிவநந்தினி வினாசித்தம்பி, திருமதி மலர்வேணி கேதீஸ்வரன்.

**கிளி/பளை றோ.க.அ.த.க.பாடசாலை**

திருமதி சு. மணிவண்ணன், குமாரவேலு இராசாம்பிகை.

**கிளி/ மாசார் அ.த.க.பாடசாலை**

செல்வி ஆ.மேரி ஆன் கோசியா

**கிளி/ தர்மக்கேணி அ.த.க.பாடசாலை**

செல்வி தம்பு வளர்மதி.

**பூநகரிக் கோட்டம்**

**கிளி/ கரியாலை நாகபடுவான் இல -2 அ.த.க.பாடசாலை**

மு.இளங்குமரன், செல்வி கு.சிசாந்தி.

**கிளி/வலைப்பாடு அ.த.க.பாடசாலை**

திருமதி மேரி றொக்சி றொபேட், கல்பனா காந்தரூபன்.

**கிளி /பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்**

திருமதி ஞா. சிவபாலாம்பிகை.

**கிளி/பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்**

செல்வி அ.மேரி அனஸ்ரினா

**கிளி/கறுப்பாய்த்தீவு அ.த.க.பாடசாலை**

திருமதி மே.கணேஸ்.

**கிளி /கிராஞ்சி அ.த.க.பாடசாலை**

செல்வி சிவானந்தி கிருஸ்ணசாமி.

**கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்**

ஆனந்தன் ஆனந்தரஞ்சன்

**கிளி/இரணைதீவு றோ.க.த.க.பா.**

அ.கி.ஜெயசீலன், திருமதி வைதேகி அசோகபாலன்.

**கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி**

செல்வி கவிதா கணேசமூர்த்தி, இந்திராணியம்மா சண்முகம், ஐயாத்துரை சண்முகராசா.

**கிளி/புனிததிரேசா பெண்கள் கல்லூரி**

திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம்.

**கிளி/யூனியன்குளம் அ.த.க.பாடசாலை**

திருமதி நவரதி செந்தில்நாதன்.

**கிளி /உருத்திரபுரம் மகாவித்தியாலயம்**

திருமதி ஜெயந்திதேவி லோகேஸ்வரன், திருமதி கா.ஜெயராணி.

**கிளி/பாரதி வித்தியாலயம்**

பிலிப்பையா அன்ரன் ஜெயராஜ், திருமதி மே.ஜஸ்ரின், மயில்வாகனம் விமலேஸ்வரன், சி.க.ஆறுமுகம்.

**கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்**

திருமதி வளர்மதி அம்பிகைபாலன்.

**கிளி/அக்கராயன் ம.வி.**

திருமதி கிரகபதி திவ்வியகுமார், செல்வி ரேணுகாதேவி, திருமதி அகிலாண்டேஸ்வரி யோகநாதன், மேரி பிரான்ஸ் சில்கா சாள்ஸ், சுந்தரலிங்கம் பிரசாந்தன், திருமதி துளசாங்சலி சுதாஜி, செல்வி ச.வினோதா, கந்தையா நந்தினி.

**கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி**

திருமதி.அருந்ததி தவரூபன்

**கிளி/ கந்தபுரம் இல-01 அ.த.க.பாடசாலை**

திருமதி கணேஸ்வரி கஜேந்திரன், நிஷாந்தா லக்ஸ்மிகாந்தன்.

**கிளி/கந்தபுரம் இல-02 அ.த.க.பாடசாலை**

திருமதி மனோகரன் ஜெயகாந்தி.

**சிளி/சிவபாதகலையகம் அ.த.க.பாடசாலை**

திருமதி யசிந்தா சிவநேசன், நடேசன் தம்பிராசா, கு.ஜெயகாந்தன், மெ.சிவரூபன்.

**கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்**

ஆ.குமரகுருபரன்

**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

செல்வி கெயில் பினறன்ஸ், திருமதி அன்பரசி பாஸ்கரன்.

**கிளி/புனித பற்றிமா றோ.க. வித்தியாலயம்**

திருமதி மோகனமாலா கிருஸ்ணபிள்ளை, செல்வராசா சுரேஸ்.

**கிளி/ அக்கராயன்அ.த.க.பாடசாலை**

சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன், சேவியர் ரசிங்ரன்

**கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம்**

செல்வி.இ.தமிழ்ச்செல்வி

**கிளி/கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை**

நாகமணி பிரபாகரன்

**கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்**

கோபால் நக்கீரன்

**கிளி/திருவையாறு ம.வி.**

வைத்திலிங்கம் வேணுகாந்தன், சிவசம்பு அகேந்திரராசா, திருமதி பாக்கியம் கிருபைநாதன், திருமதி கிருஸ்ணவேணி திருநாவுக்கரசு, திருமதி சசிகலா சிவானந்தன், செல்வி சுப்பிரமணியம் ஜெயநிதி, திருமதி விஜயா ஞானேந்திரன், திருமதி புஸ்பலதா உதயமூர்த்தி, செல்வி டெறின் ஆனந்தி சுவாமின், திருமதி குகதாசன் மீனலோஜினி, பத்மநாதன் ஸ்ரீதரன்.

**கிளி/பாரதி வித்தியாலயம்**

செல்வி குலமகள்ராதா செல்லையா

**கிளி/கிளிநொச்சி ம.வி.**

செல்வி ஜின்தா மெடினா

**கண்டாவளை கோட்டம்**

**கிளி/ குமாரசாமிபுரம் அ.த.க.பாடசாலை**

திருமதி சந்திரா பாலகிருஸ்ணன், திருமதி சாருலதா மகேந்திரன், செல்வி பொன்னையா சாந்திமதி.

**கிளி/கண்ணகையம்மன் வித்தியாலயம்**

திருமதி கணேசபிள்ளை தமிழினி, திருமதி சஞ்சீபதி அகிலேஸ்வரன்.

**கிளி/பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்**

செல்வி சோமசுந்தரம் மீனாம்பிகை, செல்வி நடராசா சிவரஞ்சினி, திருமதி அனுபாமினி தயாபரன், பேரம்பலம் திருக்கேதீஸ்வரன், வைத்திலிங்கம் மாதுளன் (VO.P), திருமதி சிறீபராபரன் விஜயலக்ஸ்மி.

**கிளி/பரந்தன் இ.ம.வி.**

திருமதி ஜெயகௌரிகுமாரி வினோகரன், திருமதி க.நித்தியானந்தராசா, செல்வி ஜெயதீஸ்வரி கனகசபாபதி, திருமதி இ.ரவீந்திரன், திருமதி வரதாணி கருணாகரன்.

**கிளி/கட்டைக்காடு அ.த.க.பாடசாலை**

சரவணமுத்து மகேந்திரன், செல்வி பொ. இந்திராதேவி.

**கிளி/ தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை**

செல்வி செல்லத்துரை செல்வராணி, திருமதி புஸ்பவதி சிறீதரன்.

**கிளி/ மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை**

சோ. சிவதாசன்,சேனாதிராசா ஜெயதீபன், செல்வி கி.சர்மிளா பெனடிக்ரா, சேனாதிராசா கோடீஸ்வரன்.

**கிளி/நாகேந்திரா வித்தியாலயம்**

செல்வி தயாநிதி நடேசு

**கிளி/பிரமந்தனாறு ம.வி.**

திருமதி கனகாம்பிகை சத்தியசீலன், வைத்திலிங்கம் யோகராசா.

**கிளி/தருமபுரம் ம.வி.**

நல்லசாமி பத்மநாதன், இரத்தினம் மதிரூபன், திருமதி சுபாமா பிரபாகரன்

**கிளி/ கல்லாறு ம.வி.**

மே. ஜெ.ஜெயசீலன்

**கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை**

திருமதி கே-மலதா சுஜீவன்

## வெளிவிவகார அமைச்சரை பதவி நீக்குமாறு அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகமவை பதவி நீக்குமாறு அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரோஹித்த பொகொல்லாகம குறித்த பதவியை வகிக்கத் தகுதியற்றவர் எனவும் அவருக்கு பதிலாக வேறும் ஒரு நபரை பணிக்கு அமர்த்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றங்களின் போது வெளிவிவகார அமைச்சுப் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இதன்படி அமைசச்ரவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டால் வெளிவிகார அமைச்சு மற்றும் ஊடக அமைச்சு ஆகியவற்றில் மாற்றம் ஏற்படத்தபடும் என ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பிற்கு மிலிந்த மொரகொட மற்றும் மஹிந்த சமரசிங்க ஆகியோரது பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

எனினும் யாரை வெளிவிவகார அமைச்சராக தெரிவு செய்வது என்பது குறித்து இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. (6)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மேலும் கடுமையாக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்ட ஏற்பாடுகளை மேலும் கடுமையாக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தற்போது நாட்டில் அமுலில் உள்ள சட்ட திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தி கடுமையான ஏற்பாடுகள் உள்வாங்கப்பட வேண்டும் என நீதி அமைச்சர் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொடவிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன்படி அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மேலும் வலுப்படத்தப்படவுள்ளது.

பயங்கரவாத சட்டத்தில் புதிய திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று எதிர்வரும் 28ஆம் திகதி அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளது.

அமெரிக்க மற்றும் பிரிட்டன் நீதிமன்ற கட்டமைப்பைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுடன் இந்த விடயம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

## 13 ஆயிரம் விடுதலைப்புலி சந்தேக நபர்களிடம் விசாரணை

### திவயின தகவல்

(கொழும்பு)

அகதி முகாம்களில் பதுங்கியிருந்த 13 ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாக திவயின ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. குறித்த விடுதலைலைப்புலி உறுப்பினர்களி டம் தனித் தனியாக வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் வவுனியாவில் உள்ள 11 முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

11 முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 13ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தொடர்பிலான புகைப்படங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பிணர்களின் மிக முக்கியமான சிரேஷ்ட தலைவர்கள் பலர் அடங்குவதாகவும் இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட விடுதலைப்புலி உறுப்பினர்களை அடையாளம் காணும் விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பயங்கரவாதிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (6)

## ஜீ.எஸ்.பி வரிச்சலுகை ரத்தானால் பாரிய பொருளாதார பின்னடைவு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை கிடைக்கப் பெறாவிட்டால் பாரிய பொருளாதார பின்னடைவுகள் ஏற்படும் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஆடைக் கைத்தொழில்துறை மட்டுமன்றி வேறும் கைத்தொழில் துறைகளும் பாதிக்கப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.

2700 பொருட்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டிருந்தது எனவும், வரிச் சலுகை இடைநிறுத்தப்பட்டால் பாரிய பொருளாதார பின்னடைவு ஏற்படும் எனவும் அந்த ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிச்சலுகை ரத்துச் செய்யப்படுமிடத்து மொத்தமாக பத்து லட்சம் பேர் இலங்கையில் தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிடும் எனக் குறிப்பிடப்படுகிறது. (6)

# இடம் பெயர்ந்த மக்களின் நடமாட்ட சுதந்திரத்துக்காக தொடர்ந்தும் பாடுபடுவோம்

## இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் வடக்கில் இடம்பெயர்ந் தோரின் நடமாட்ட சுதந்திரத்துக்காக நாம் தொடர்ந்து பாடுபடுவோம் என்று இலங்கைக் கான அமெரிக்காவின் புதிய தூதுவராக பொறுப் பேற்றுள்ள பற்றீசியா ஏ.பியூடெனிஸ் ஊட கங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஊக்கம் ஆக்கம் உள்ளதும் சுதந்திரமான துமான ஊடகம் ஜனநாயகத்தின் அத்தியா வசியமான அம்சங்களுள் ஒன்றாகும். மாறு பட்ட கருத்துகள் செவிமடுக்கப் படவேண்டும். சகித்துக்கொள்ளப்படவேண்டும்.

ஊடகங்களை அடக்குபவர்கள் அல்லது அச்சுறுத்துபவர்கள் முழு நாட்டிற்கும் கேடு விளைவிப்போராவர் என்றும் குறிப்பிட்டுள்ள அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித் துள்ளதாவது,

இராஜதந்திர சேவையில் கடந்த 30 ஆண்டு களாக ஈடுபட்டுள்ள நான் இம் முப்பதாண்டு காலத்தில் ஏறத்தாழ அரைப்பகுதியை தென் ஆசியாவில் கழித்திருக்கிறேன் என்ற வகை யில் தென் ஆசியாவுக்கு மீண்டும் திரும்பு வதையிட்டு தனிப்பட்ட முறையில் நாம் மகிழ்ச் சியடைகிறேன்.

அபிவிருத்திக்கான உதவியை நோக்கும் போது 1956 ஆம் ஆண்டு முதல் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்ஸி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக இரண்டு பில்லியனுக் கும் அதிகமான ஐக்கிய அமெரிக்க டொலர் களை வழங்கியுள்ளது.

இவ்வருடத்தில் மட் டும் இலங்கையின் வடக்கில் உள் நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏழு பில்லியன் உணவுப் பொட் லங்களை வழங்குவதற்கு உதவியாகக் கொடுக்கப்பட்ட நிதியும் இதில் அடங்கும்.

ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாகப் போர் இலங்கையை அழித்தது. இந்நாட்டில் வாழும் மக்களுள் ஏறத்தாழ அரைவாசிப்பேர் இம் மோதலுக்கு முற்பட்ட காலத்தை நினைவு படுத்திக்கொள்ள முடியாத அளவிற்கு இளை யோராக இருக்கிறார்கள்.

மனித உரிமைகளை முன்னேற்றுதல் நமது முக்கியமான உலகளாவிய அக்கறை களுள் ஒன்றாகும் .

ஐக்கிய அமெரிக்கா உட் பட எந்தவொரு நாடுமே மனித உரிமைகளைக் காத்தல் தொடர்பாக முழுமையாக பதிவைக் கொண் டதாக இல்லை.

உலகம் முழுவதிலும் வாழும் மக்களின் உரிமைகளுக்காகவும் சுதந்திரங் களுக்காக வும் செயற்பட வேண்டியது நமது பொறுப் பென்று நாம் நம்புகின்றோம்.

எனவே இலங் கையில் வடக்கில் உள் நாட்டில் இடம்பெயர்ந் தோரின் நடமாட்டச் சுதந் திரத்திற்காக நாம் தொடர்ந்தும் பாடுபடுவோம் என்பதே இதன் கருத்தாகும்.

இந்த இலங்கைப் பிரஜைகள் பல தசாப் தங்களாக இன்னல்பட்டுள்ளார்கள். புதிய இலங் கையில் தமது வாழ்வை மீள ஆரம்பிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் தேவை யில்லை. அவர்கள் அவ்வாறு செய்வதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று நாம் தூண்டுகின்றோம்.

ஊக்கம் ஆக்கம் உள்ளதும் சுதந்திரமான துமான ஊடகம் ஜனநாயகத்தின் அத்தியா வசியமான அம்சங்களுள் ஒன்றாகும் மாறு பட்ட கருத்துக்கள் செவிமடுக்கப்படவேண்டும் சகித்துக்கொள்ளப்படவேண்டும் ஊடகங்களை அடக்குபவர்கள் அல்லது அச்சுறுத்துபவர் கள் முழு நாட்டிற்கும் கேடு விளைவிப் போரா வர்.

எனது பதவிக்காலத்தில் மக்களோடும் அரசாங்கத்தோடும் சேர்ந்து உழைப்பதற்கும் நான் காத்திருக்கின்றேன் என்றார் அவர். (6)

## கூட்டுறவுத்துறை சார்ந்த பிரச்சினைகள் படிப்படியாகத் தீர்க்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

முன்னாள் கூட்டுறவுத் துறை அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் கூட்டுறவுத்துறை சார்ந்து நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் தான் நன்கறிந்துள்ளதாகவும், உடனடியாக அல்லாதவிடத்தும் படிப்படியாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தான்அதிக கவனம் செலுத்தி வருவ தாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரி வித்துள்ளார்.

வட்டுக்கோட்டை மற்றும்அராலி பகுதிக ளில் இரு சிறப்பு சிறிய கூட்டுறவு நகர்களைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தம் மற்றும்இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பல வருடங்களாகப் பாதிக்கப் பட் டுள்ள எமது கூட்டுறவுத்துறை சார்ந்த நிறு வனங்களை உரியமுறையில் மீளக் கட்டி யெழுப்புவதே தனது நோக்கம் என்பதை உணர்த்திய அமைச்சர் தான் மேற்கொண்டு வருகின்ற மேம்பாட்டுத்திட்டங்களை முன்னெ டுக்கும் போது ஏனைய துறைகளுடன் சேர்த்து கூட்டுறவுத் துறையும் பாரிய வளர்ச்சி காணும் என்பதில் தனக்கு உறுதியான நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்தார். (6)

# இலங்கை நிலைவரம் தொடர்பில் சர்வதேசத்தின் பார்வை

## மக்களின் இயல்பு வாழ்க்கை மீளக்கிடைக்கும்

(கொழும்பு)

1945ஆம் ஆண்டு ஜேர்மனி ஏலியஸ் படையின்ரிடம் சரணடைந்ததன் பின்னர் யுத்தத்தில் வெற்றி பெற்றாலும் சமாதா னத்தை தோற்று விட்டோம் என்ற வின்சன்ட் சேர்ச்சிலின் கருத்துப்படியே இலங்கை அர சாங்கத்துக்கும் நிகழ்ந்திருப்பதாக எக்ஸாமி னார் என்ற ஆங்கில இணையத்தளம் தெரி வித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் 26 வருடங்கள் இடம்பெற்ற பாரிய தொடர் யுத்தத்தில் வெற்றி கண்டு விட்டதாக அறிவித்தாலும் அது உண் மையான சமாதானத்தை முழுமையாக தொலைத்து விட்டதாக அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங் கியவர்களும் அல்லாதவர்களும் நாட்டின் அடிப் படை கைதிகளாகவே அரசாங்கத்தினால் நடத் தப்படுவதாக அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் பருவ பெயர்ச்சி மழை காலத் தில் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற எச் சரிக்கைக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் தொடர்ந்து முகாம்களிலேயே தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கையின் சனத் தொகையில் நான்கில் ஒரு பங்கினை நிரப்பு கின்ற சிங்கள இனத்தவர்களே நாட்டின் அர சாங்கம் மற்றும் இராணுவத்திலும் பெரும் பான்மை பலத்தை கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தமிழர்களின் உரிமை களுக்காக உருவான ஒரு போராட்டக்குழுவே விடுதலைப்புலிகள் என விபரித்துள்ள இந்த இணையத்தளம் அவர்கள் மிகவும் நேர்த்தி யான போராட்டம் ஒன்றை முன்னெடுத்ததாக வும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் 26 வருட கால யுத் தத்தை இலங்கை அரசாங்கமே வென்றெடுத் ததாக அறிவித்து வருகிறது. எனவே இலங் கையில் வன்முறைகளை தடுத்து நிறுத்த வேண் டிய பொறுப்பு அரசாங்கத்திடமே இருப் பதாக இணையத்தளம். குறிப்பிட்டுள்ளது.

தமிழர்கள் நல்லெண்ண அடிப்படையி லேயே தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள் ளதாக தெரிவித்து வரும் அரசாங்கம் அதற்கு நிலக்கண்ணி வெடிகளை காரணம் காட்டி வருகிறது.

எனினும், அரசாங்கத்தின் இந்த வாதம் பொய்யானது என சுட்டிக்காட்டியுள்ளது. குறிப் பாக தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் அனை வரும் தமிழர்களே தவிர சிங்களவர்கள் இல்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அந்த இணையத் தளம் பாதுகாப்பான தடுத்து வைப்பு என்ற போர்வை அரசாங்கத்தின் போலி வித்தை என தெரிவித்துள்ளது.

தற்போதேனும் இலங்கையின் நிலவரம் தொடர்பில் சர்வதேசத்தின் ஆழமான பார்வை பதிந்துள்ள நிலையில் அனர்த்தத்துக்கு உள்ளான மக்களின் இயல்வு வாழ்க்கை மீளக் கிடைக்கப்பெறும் என த எக்ஸாமினர் இணையத்தளம் நம்பிக்கை வெளியிட் டுள்ளது. (6)

# இந்த வருடம் வரவு செலவுத்திட்ட யோசனை முன்வைக்கப்படமாட்டாது


## லங்கா தீப தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2010ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட யோசனை முன் வைக் கப்படமாட்டாது என லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இரண்டு பெரிய தேர்தல்கள் அதாவது ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்கள் நடை பெறவிருப்பத னால் நவம்பர் மாதம் வரவு செலவுத்திட்ட பிரேரணை முன் வைக் கப்படமாட்டது என குறிப்பிடப்படுகிறது.

வரவு செலவுத் திட்டத்திற்கு பதிலாக இடைக்கால கணக்கறிக்கை ஒன்று சமர்ப்பிக் கப்படவுள்ளது.இந்த இடைக்கால கணக்கறிக் கையின் மூலம் 2010 ஆம் ஆண்டிற்கான முதல் நான்கு மாத செலவுகள் ஒதுக்கப்பட் டுள்ளன. எதிர்வரும் வருடத்தில் புதிய பாராளு மன்றம் ஒன்று தெரிவு செய்யப்படவுள்ளதாக வும் இந்த பாராளுமன்றத்திற்கான வரவு செலவுத் திட்டயோசனை பின்னர் சமர்ப்பிக் கப்படும் எனவும் தெரி விக்கப்படுகிறது.

ஜனாதிபதித்தேர்தல் ஒன்றும் நடைபெற இருப்பதனால் வரவு செலவுத்திட்டம் ஒன்றை முன் வைப்பதில் எவ்வித நன்மையும் கிட்டாது என குறிப்பிடப்படுகிறது. (6)



வடக்கின் வசந்தம் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் அம்பன் விவசாய போதானாசிரியர் பிரிவிற்குட்பட்ட மணற்காடு , அம்பன் , குடத்தனை ஆகிய கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த பயனாளிகளுக்கு மரக்கன்று வழங்கும் நிகழ்வு அண்மையில் குடத்தனையில் அமைந்துள்ள மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மங்கல விளக்கேற்றுவதையும் விவசாயப் போதனாசிரியர் வை. ஞானபாஸ்கரன் தலைமையுரையாற்றுவதையும், தலைமைப்பீட கிராம உத்தியோகத்தர் சி. ரவிக்குமார் உரையாற்றுவதையும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தனிநாயகம், பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தர் செ. செல்வவரதர் ஆகியோர் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சனிப்பெயர்ச்சி 26.09.2009 முதல் 14.11.2011 வரை உங்களுக்கு எப்படி?

## மேடம்



(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் வரை)

ஆறாமிடத்தின் ஆதிக்கம் ! அன்றாடம் வரும் ஆதாயம்!

சம்ஜோசித புத்தியால் சாதனைகள் நிகழ்த்தும் மேடராசி நேயர்களே !

உங்கள் ராசிநாதன் செவ்வாய் தைரியகாரகன் என்று அழைக்கப்படுவார். தைரியமும் தன்னமிக்கையும் உங்களுக்கு ஏற்படுத்தி தரணியில் புகழ் குவிக்க அவரே வழி காட்டுகிறார். பூமிகாரகன் என்றும் அவரை அழைப்பார்கள் .எனவே, பூமியோகம் உங்களுக்கு அதிகம் உண்டு.

சாமி துணையும் பூமி துணையும் உங்களுக்கு இருப்பதால் தான் சந்தித்தவர்களெல்லாம் உங்களுடன் பழக்கம் வைத்துக் கொள்ள பிரியப்படுகிறார்கள். நீங்கள் காலடி எடுத்து வைத்த வீடுகளில் எல்லாம் காசு பணம் குவிக்கிறது என்று சொல்வார்கள். வீட்டு யோகம் இருக்கும் உங்களுக்கு கூட்டுயோகம் கிடையாது.

வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசும் நீங்கள் ஏதேனும் தவறு நேர்ந்தால் தட்டிக் கேட்கவும் தயங்கமாட்டீர்கள். திட்டம் போட்டு செயல்படுத்துவதில் நீங்கள் கெட்டிக்காரர்கள் சில சமயங்களில் மனதில் பட்டதை மறைக்காமல் சொல்வதால் தான் பலரின் எதிர்ப்புகளுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலைஏற்படுகிறது . வரும் கிரகங்கள தாகத தலைத் தருகிறதா? அல்லது தூக்கி நிறுத்துகிறதா? என்பதை சுய ஜாதகத்தை ஆராய்ந்து செவ்வாய் இருக்கும் சார பலமறிந்து தெரிந்து கொண்டு அதற்குரிய சிறப்பு பரிகாரங்களைச் செய்தால் செல்வ வளம் பெருகும்.

ராசிநாதன் செவ்வாய் அம்சத்தில் இருக்கும் நிலையறிந்து அதைப் பார்க்கும் கிரகமும் அதோடு சேர்க்கை சேர்ந்த கிரகமும் பார்த்து அதற்குரிய எண்ணாதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக்கொண்டால் பொன்னான எதிர்காலம் இப்பூவுலகில் வந்து சேரும்.

வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுக்கும் பொழுது தங்கு தடைகள் அகலவும் தக்க விதத்தில் வாழ்க்கை அமையவும் மங்கள காரகன் செவ்வாயின் நிலையறிந்து பொருத்தம் பார்த்து தேர்ந்தெடுப்பதே நல்லது. சகோதர காரகன் செவ்வாய் உங்கள் ராசிநாதன் என்பதால் சகோதர பாசம் அதிகம் கொண்டவர்கள் நீங்கள். அதன் விளைவாக தொல்லைகளையும் சில சமயங்களில் சந்திப்பீர்கள். எல்லையில்லாத நற்பலன்களையும் சந்திப்பீர்கள். வெற்றி வாய்ப்புகளை வீடு தேடி வரவழைத்துகொள்ள எந்த நேரமும் சிந்திதுக் கொண்டிருக்கும் உங்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தானா? என்பதைப் பற்றி பார்ப்போம்.

பொன்னான நேரம் புரட்டாசி 10ஆம் திகதி முதல் 6ஆம் இடத்தில் சனி சஞ்சரிக்கப்போகிறார். அங்கிருந்து கொண்டு 3, 8,12 ஆகிய இடங்களைப் பார்த்துப் புனிதப்படுத்தப் போகிறார். இதன் விளைவாக எண்ணற்ற நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறப்போகின்றது.

திருமணங்கள் , மணி விழாக்கள் போன்றவைகளை நடத்தி மகிழ்வீர்கள்.



வழக்குகளில் வெற்றி கிட்டும். உத்தியோகத்தில் மேலதிகாரி கள் உங்கள் திறமைகளைக் கண்டு பாராட்டு வர். பணியில் விருப்ப ஓய்வு பெறலாம் என்று நினைத்தவர்கள் கூட இனி மீண்டும் பணியைத் தொடர்வோம் என்று நினைக்கத் தூண்டும் எதிரிகள் விலகுவர். இருந்த கடன்சுமை குறையும்.

ரண சிகிச்சை செய்து குணமடைய வேண்டும் என்று சொன்ன நோய்கூட சாதாரண சிகிச்சையிலேயே குணமாகிச் சந்தோஷத்தைக் கொடுத்து விடும். காக வாகனத்தை நேசித்து அவனுக்குரிய சனி கவசத்தைப் பாடி வழி பட்டு வந்தால் எதிர்ப்பு , வியாதி கடன் எனப்படும் இடத் தால் வரும் தொல்லைகளை மாற்றி எல்லையில்லாத யோகத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

**ஆறாம் இடத்து சனியால் அப்படி என்ன மாற்றம் வரும்?**

உங்கள் ராசிக்குச் சனி பத்து பதினொன்று ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி ஜீவன் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எண்ணிய காரியங்களையும் முடித்து வைக்கும் அந்நிய தேசத்திலும் அடியெடுத்து வைக்கும் வாய்ப்பைக் கொடுக்கும்.

தைரியம் கூடும், தன்னம்பிக்கை மேலோங்கும், வரன் பார்த்துச் சென்று முடிவு சொல்லாதவர்கள் வாயிற்க் கதவைத் தட்டி வரும் மாதத்திலேயே முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வார்கள் பயணங்கள் அதிகரிக்கும். புயலாக இருந்த வாழ்க்கை இனி தென்றலாக மாறும்.

**சனியின் பார்வையால் சந்தோஷம் ஏற்படும்!**

கன்னி ராசியில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை உங்கள் ராசிக்கு 3,8,12 ஆகிய இடங்களில் பதிகிறது. அந்த மூன்று இடங்களிலும் முக்கியமான மாற்றங்கள் உருவாகப் போகின்றன. சகோதர சகாய ஸ்தானம், ஆயுள் ஆரோக்கிய ஸ்தானம், விரய ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கும் சனியால் உடன்பிறப்புகள் வழியில் ஒற்றுமை இனி உருவாகும்.

பாசத்தையும், நேசத்தையும் உறவினர்களிடம் காட்டுவீர்கள் .எனவே விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். ஆயுள் காரன் சனி ஆயுள் ஸ்தானத்தைப் பார்ப்பதால் நோய்கள் இனி நொடியில் குணமாகும்.

எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்க இல்லத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அப்போது தான் கொடுத்த வாக்கையும் காப்பாற்ற இயலும் கொள்கைப்பிடிப்போடு செயல்படவும் முடியும். அடுத்தவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கூடும்.

உடன்பிறப்புகளின் முன்னேற்றம் கருதி ஒரு பெரும் தொகையொன்றைச் செலவிடும் சூழ்நிலை அமையும். அவர்களது இல்லத்தில் நடைபெறும் கல்யாணக் காரியங்களுக்கும் கடல் தாண்டும் வாய்ப்பிற்கும் கைகொடுத்து உதவுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் உங்கள் உடன்பிறப்புகளை ஒரு பங்குதாராக ஏற்றுக்கொள்ளலாமா? என்று நினைப்பீர்கள்.

உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ள ஒவ்வொரு காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை மீண்டும் வந்து சேரும். சுபச் செலவுகள் அதிகரிக்கும்.

பொதுவாக யோக பலம் பெற்ற நட்சத்திரமும், சனிக்கிழமையும் இணையும் நாளில் தெசாப்புத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளைத் திருப்தியாகச் செய்வதோடு சனிப் ப்ரீதியும் செய்து வந்தால் சங்கடங்கள் தீரும். சந்தோஷங்கள் கூடும்.

**ராகு கேது பெயர்ச்சிக் காலம்!**

27.10.2009இல் தனுசு ராசியில் ராகுவும் மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். தேவையான பணம் தேடி வந்து சேரும். தந்தை வழி உறவால் தனலாபம் கிட்டும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வீர்கள். சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் அலைச்சல் அதி கரிக்கலாம். ஆனாலும் ஆதாயம் குறையாது. அரசியல் செல்வாக்கு மேலோங்கும். தொழில் கூட்டாளிகளை விலக்கி புதியவர்களைச் சேர்க்க நினைப்பீர்கள். வீடு கட்டும் முயற்சி வெற்றி தரும். சர்ப்ப ஸ்தலங்களுக்குச் சென்று சர்ப்ப சாந்திகளை முறையாக செய்து வந்தால் முன்னேற்றம் கிட்டும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

சுமார் 2 1/2 ஆண்டுகள் கன்னி ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது 15.12.2009 இல் கும்ப ராசியில் குரு சஞ்சரித்து அதன் பார்வை பலத்தால் பலவித மாற்றங்களைக் கொடுப்பார். 2010 இல் மீன ராசியில் குரு சஞ் சரிக்கும் பொழுது விரய ஸ்தானம் பலம் பெறுவதால் எதிர்பாராத விரயங்களை வழங்குவார். பொதுவாக குரு பார்க்கக் கோடி நன்மை என்பதால் உங்கள் ராசிக்கு சகோதர ஸ்தானத்தையும் பஞ்சமஸ்தானத்தையும் களத்திர ஸ்தானத்தையும் பார்க்கப்போவதால் உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் பூப்புனித நீராட்டு விழாக்கள் போன்றவைகள் இல்லத்தில் நடைபெறும். பொது வாழ்வில் புகழ் கூடும். வாகன யோகம் உருவாகும். விவாகம் விருப்பப்பட்டபடி நடைபெறும்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது தாயின் உடல் நலம் சீராகும். இடம்பூமி வாங்கி வீடு கட்டுவீர்கள். பங்காளிகள் பகை மாறும்.

**சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற..**

14.01.2010 முதல் 31.5.2010 வரையும் மீண்டும் 27.01.2011 முதல் 13.06.2011 வரையும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார்.

உங்கள் ராசிக்கு 10,11 க்கு அதிபதியாக விளங்கும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறி மாறி

**ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்**

வந்துகொண்டேயிருக்கும். எனவே உங்கள் குறைகள் அகல வேண்டுமானால் கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை. கடன் சுமை கூடும். கவலைகள் சேரும் இடமாற்றச் சிந்தனை மேலோங்கும். இல்லத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லாவிட்டால் தொல்லைகள் அதிகரிக்கும் முகம் சுளிக்காமல் மற்றவர்களுடன் பழகுவது நல்லது.

தெய்வீகப் பணிகளில் அதிக அக்கறை செலுத்தினால் தித்திக்கும் வாழ்க்கை அமையும். படுத்திருக்கும் நேரம்கூட விழித்திருந்தால் தான் தொடர்ந்து வந்த துயர் மாறும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

எனவே இக்காலம் பொற்காலமாக அமைய வேண்டுமானால் அனுமன் வழிபாட்டிலும் சனி பகவான் வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுங்கள். கற்பக விநாயகரை வழிபட்டு காரியங்களைத் தொடங்குங்கள்.

**சிறப்பு வழிபாடு**

கன்னிச் சனியால் எண்ணிய காரியங்களில் வெற்றி பெற வழிபாடு ,

நாள் தெய்வதை நல்லவன் செய்ய மாட்டான், கோள் செய்வதை கொடுப்பவன் செய்ய மாட்டான் என்பது பழமொழி.

எனவே வார வழிபீாடாக செவ்வாய்க் கிழமை தோறும் செல்வநிலை உயர முருகப் பெருமானை வழிபாட்டு வாருங்கள் சோகங்கள் மாறும், சுகங்கள் கூடும்.

எள்ளினில் தீபம் ஏற்றி
எதிரினில் வைத்தேன் ஈசா !
சொல்லையே செயலாய் மாற்ற
துணை நின்று அருளுவாயே!

என்று சனீஸ்வரன் சந்தியில் பாடுங்கள் இனி வரும் நாட்கள் இனிய நாட்களாக மாறும். (தொடரும்)

# இவ்வருடம் ஆயுர்வேத வைத்தியத்துறைக்கு 300 பட்டதாரிகளை இணைக்கத் திட்டம்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

(கொழும்பு)

இந்த வருடம் ஆயுர்வேத வைத்தியத் துறைக்கு 300 பட்டதாரிகளை இணைத் துக்கௌ்ள சுதேச மருத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது. இவர்கள் சமூக சுகாதார மேம்பாட்டுச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதியை வழங்குமாறு ஏற்கனவே நிதி அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

உத்தேச திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் தலா 3 சுதேச வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மற்று மொரு கட்டமாக ஏற்கனவே 220 சுதேச மருத்துவ நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

நாட்டில் வேலை வாய்ப்பற்ற 600க்கும் மேற்பட்ட சுதேச மருத்துவப் பட்டதாரிகள் உள்ளதாகவும் கட்டம் கட்டமாக அனைவருக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த குறிப்பிட்டார். (6-3)

# முகாமுக்குள் துப்பாக்கி ரவை

(வவுனியா)

வவுனியா மினிக்பாம் முகாமிற்குள் முச்சக்கரவண்டி ஒன்றினூடாகக் கொண்டு செல்ல முற்பட்ட இரண்டு துப்பாக்கித் தோட்டாக்களைக் பாதுகாப்புத்தரப்பினர் மீட்டுள்ளனர்.

இந்தத் தோட்டாக்கள் ரி.56 ரக துப்பாக்கிகளிற்கும் பயன்படுத்தக் கூடியதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாம்களிற்குள் வெற்றிலை, புகையிலை என்பவற்றைக் கொண்டுசெல்லும் முச்சக்கரவண்டி ஒன்றில் வைத்து இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குண்டுகளுடன் இணைக்கபட்டிருந்த மீன் வலுசேர்க்ககக்கூடிய இரண்டு மின் கலங்களையும் பாதுகாப்புத்தரப்பினர் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-14)

முதன் முதலாக நீங்கள் எதையாவது செய்யுங்கள். பின்னால் வருபவர்கள் அதை இன்னும் அழகாகச் செய்வார்கள்.

– பாப்லோ பிக்காஸோ

வலம்புரி

# கற்பூர தீபத்தில் கலை இறங்கும் எங்கள் தமிழ்த் தலைமைகள்

தமிழ் இனத்திற்கு இது நல்லகாலம் அல்ல. இலங்கையில் தமிழ் தலைமைகள் தோற்றுப் போயின என்ற உண்மை மரியாதையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஒற்றுமையின்மை, அளவுக்கதிகமான சுய நலம், விட்டுக்கொடுக்கும் பண்பின்மை போன்ற இன்னோரன்ன விடயங்கள் தமிழ்த் தலைமைகளின் தோல்விக்குக் காரணம் எனலாம்.

இதுபற்றி ஆராய்வதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. டாக்டர் மு.வரதராசனார் தமிழ் இனத்தின் பலவீனத்தை துலாம்பரப்படுத்தி உள்ளார்.

ஆக, டாக்டர் மு.வரதராசனாரை கடந்து தமிழ் இனத்தில் இருக்கக்கூடிய பலவீனங்களை சுட்டிக்காட்டும் அளவிற்கு ஏதுமில்லை.

எனவே அதனை அப்படியே விட்டுவிடலாம். வன்னி யுத்தம் அதன் முடிவு என்ற கால எல்லைக்குள், பிரிந்து நிற்கும் தமிழ் தலைமைகள் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். இதுபற்றி இவ் விடத்தில் பல தடவைகள் எழுதியிருந்தோம்.

நாம் எழுதியதற்காக நடக்கவில்லையே என்ற கவலை இம்மியும் கிடையாது. மாறாக சுமார் இருபதாயிரம் பொதுமக்கள் வன்னியில் பலியாகிப்போக, மூன்று இலட்சம் மக்கள் முகாமில் அடைபட, அதில் நோய்வாய்ப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் பலியாக இவை எல்லாவற்றையும் பார்த்திருந்தும் ஒன்றுபடாத தமிழ்த் தலைமைகள் ஈரேழு பதினான்கு லோகத்திலும் ஒன்றுபடும் வாய்ப்பில்லை என்பது உறுதியாகி விட்டது.

தமிழ் இனத்திற்கு எக்காலத்திலும் இல்லாத் துயர் வந்த போதும் ஒன்றிணையாத் தமிழ்த் தலைமைகள் குறித்து கவலை கொள்ள வேண்டிய தேவை மனிதநேயம் படைத்த எவருக்கும் இருக்கவே செய்யும்.

இதில் இன்னும் பெரும் வேதனை, ஆளும் தரப்பின் ஆதரவைப் பெறுவதில் தமிழ்க் கட்சிகள் காட்டும் போட்டியாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்பொன்றை அண்மையில் நடத்தியது. அந்த சந்திப்பிற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சற்றுத் தலையெடுத்தமாதிரியான மாயை உணரப்படுகின்றது.

காலாகாலமாகத் தமிழ்த் தலைமைகளை கறிவேப்பிலையாகப் பயன்படுத்தி வந்த ஆட்சியாளர்களுக்கு எந்த நேரத்தில் எவரைத் தட்டிக் கொடுக்க வேண்டும் என்பதும், மெல்லத் தடவி மடக்கி விட வேண்டும் என்பதும் நன்கு தெரியும்.

இப்போது அரசின் முக்கிய பணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆற்றுப்படுத்துவது. இதற்கு உருத்திர அபிஷேகம் தேவையில்லை. ஒரு தேங்காயும் காவடிக் கற்பூரத்தின் சிங்கிள் பைக்கற்றும் போதும் என்பது அரசுக்கு நன்கு தெரியும்.

இந்த தேங்காய் அடிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கலை அடங்கியுள்ளது.

காலம் வரும் போது வைரவர் மடையுடன் அவர்களும் வெளியில்தான்.

அட! அவர்களை வெளியேற்றும் கற்பூர தீபத்தில் இன்னொன்று அரசுடன் அணையாமலா இருக்கப் போகிறது?

எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.

# மனித உரிமை விசாரணைகள் தொடர்பான ஐ.நாவின் கோரிக்கை நிராகரிப்பு

மனித உரிமை விசாரணைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த புதிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு கோரியுள்ளது.

எனினும் இந்தக் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அரசியல் விவகாரப் பிரதிப் பொதுச் செயலாளர் லியொன் பாஸ்கோவினால் இந்த கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான விசேட பொறிமுறைமை ஒன்றை அமைக்க வேண்டிய எவ்வித அவசியமும் அரசாங்கத்திற்கு இல்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எந்தவொரு நபரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீதி மன்றத்தின் உதவியை நாட முடியும் எனக் குறிப்பிடப் படுகிறது. (6)

# சொந்த இடங்களில் மீள் குடியேற்றத்திற்கென அழைத்து வரப்பட்டோர் முகாம்களிலேயே தங்கவைப்பு

(கொழும்பு)

வவுனியா நிவாரணக் கிராமத்தில் இருந்து மீள் குடியேற்றத்திற்காக அழைத்துவரப்பட்ட கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த இரண்டாவது தொகுதியினர் ஒரு வாரம் கடந்து விட்ட நிலையிலும் சொந்த மாவட்டங்களில் உள்ள இடைத்தங்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வைபவரீதியாக விடுவிக்கப்பட்டு சிவில் அதிகாரிகளினால் பொறுப்பேற்கப்பட்டு மறு நாள் சனிக்கிழமை சொந்தமாவட்டங்களுக்கு இவர்கள் அழைத்துவரப் பட்டிருந்தனர்.

இக் குடும்பங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 72 குடும்பங்கள் (238பேர்) சிங்கள மகாவித்தியாலயத்திலும் , 45 குடும்பங்கள் (127பேர்) குறுக்கல் மடம் கலைவாணி வித்தியாலயத்திலும். தங்க வைக்கப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத் தைச் சேர்ந்த 42 குடும்பங்கள் (130 பேர்) அக்கரைப்பற்று 4ஆம் கட்டையில் உள்ள பழைய நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியத்தில் தங்க வைக்கப்பட்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஈச்சிலம் பற்றை , திருகோணமலை மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேசங்களில் உள்ள 4 பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சொந்த இடங்களில் மீள் குடியேற்றத்திற்கென அழைத்து வரப்பட்ட இவர்களிடம் இருந்து பல்வேறு விபரங்களை பதிவு செய்ய வேண்டியிருப்பதால் இரண்டு நாட்களில் இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட பலரும் அந்நேரம் தெரிவித்திருந்தனர். எனினும். தொடர்ந்தும் இவர்கள் முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

சில இடைத்தங்கல் முகாம்களில் உறவினர்கள் பார்வையிட அனுமதி அளிக்கப்படுகின்றது. ஓரிரு இடைத்தங்கல் முகாம்களில் இதற்கான அனுமதி மறுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அதேவேளை ஈச்சிலம் பற்று செண்பகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களைப் பார்வையிட நேற்று முன்தினம் முதல் உறவினர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மீள் குடியேற்றத்திற்கென அழைத்து வரப்பட்ட இக் குடும்பங்களைப் பொறுத்தவரை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பது குறித்து இதுவரை ஒரு தீர்க்கமான முடிவும் வெளியாகா நிலையே காணப்படுகின்றது. (6)

# ஈழத்தமிழர்களுக்காக திருச்சியில் கிறிஸ்தவர்கள் உண்ணாவிரதம்

(திருச்சி)

திருச்சி மறைமாவட்ட கிறிஸ்தவர்கள் சார்பில் ஈழத் தமிழர்களுக்கு வாழ்வுரிமை வழங்க கோரி ஜங்ஷன் காதிகிராப்ட் முன்பு நேற்றுக்காலை உண்ணாவிரதம் நடந்தது.

திருச்சி மறை மாவட்ட முதன்மைகுரு தோமஸ் பால்சாமி தலைமை தாங்கினார்

உண்ணாவிரதத்தில் பெரியார் திராவிட கழக முத்து ம.தி. மு.க மாநகர் மாவட்ட செயலாளர் மலர்மன்னன், வைகறை, தமிழகன், மணிநாதன், வக்கீல் பானுமதி ,சகாய மேரி, பவுல் கல்லூரி ஸ்டீபன், திரு இருதய சபை மாநில தலைவர் பங்கிராசு, சலேசிய சபை மாநில தலைவர் அமல்ராஜ், திருச்சி அன்னாள் சபை மாநில தலைவி ரோஸ்லின் உட்பட பலர் கண்டன உரையாற்றினர்.

இப்போராட்டத்தில் இலங்கையில் போர் காலத்திலும் போர் முடிந்த பின்பும் ஈழத் தமிழர் மீது போர் குற்றங்கள நடத்தப் பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இக்குற்றங்களை அனைத்து சட்டங்களின் அடிப்படையில் விசாரணை நடத்த வேண்டும்.

இலங்கை அதிபர் ராஜபக்சே உட்பட குற்றத்தில் ஈடுபட்ட அனைவரும் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள நிறைவேற்றப்பட்டன. (6)

## பிரபாகரன் படத்துடன் சீமான் பேட்டி ; கைது செய்யக் கோரி பொலிஸில் புகார்

(சென்னை)

பிரபாகரன் படத்துடன் நடிகர் சீமான் பேட்டியளித்துள்ளது தமிழக வாரப்பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது. இந்தப் பேட்டியில் இந்திய இறையாண்மைக்கு எதிராக சீமான் பேசியுள்ளதாகவும் அவரை கைது செய்ய வேண்டும் எனவும் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் பொலிஸில் புகார் மனு கொடுத்துள்ளார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது, புலித் தலைவர் பிரபாகரன் படத்துடன் சினிமாக்காரர் சீமான் ஒன்றாக இருக்கும் படம் வாரப்பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது. முன்னாள் இந்திய பிரதமர் ராஜிவ் கொலை சம்பவத்திற்கு காரணமான புலிகள் இயக்கத்தை தொடர்ந்து ஆதரிப்பதாக சீமான் பேட்டியளித்துள்ளார். அவரது பேட்டி இந்திய இறையாண்மைக்கு எதிரானது. அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

## 9 ஆவது உலகத்தமிழர் மாநாட்டை கோவையில் நடத்த முடிபு

(சென்னை)

9ஆவது உலகத்தமிழ் மாநாடு கோவையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை 4 நாட்கள் நடைபெறவுள்ளது. முதல் அமைச்சர் கருணாநிதி தலைமையில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் இதற்கான முடிபு எடுக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் உலகத் தமிழ் மாநாடு பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. 9 ஆவது உலகத்தமிழ் மாநாட்டுக்கான பல்வேறு குழுக்களை அமைப்பது குறித்தும் எந்தெந்த குழுவினை யார் யார் தலைமையில் யார் யாரை உறுப்பினர்களாக கொண்டு அமைப்பது என்பது குறித்தும் யோசிக்கப்பட்டதோடு கோவையில் பல ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்கான இடங்கள் குறித்தும் பொது மாநாட்டினை நடத்துவதற்கான இடம் குறித்தும் ஊர்வலம் செல்லும் பாதை பற்றியும் யோசிக்கப்பட்டு அடுத்தடுத்து நடைபெறும் கூட்டங்களில் அவற்றைப் பற்றிவிரிவாக விவாதிப்பதென்று முடிவெடுக்கப்பட்டது.

9ஆவது உலகத்தமிழ் மாநாட்டினை 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ,22 ,23 ,24 ஆம் திகதிகளில் நடத்துவதென்றும் வெளிநாட்டில் வாழும் தமிழ் அறிஞர்கள் ஆன்றோர், சான்றோர்களுக்கு மாநாடு குறித்து உடனடியாக தொடர்பு கொண்டு அறிவிப்பதென்றும் அழைப்பு அனுப்புவதென்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## நம்பிக்கையும் வலிமையும்



ஒவ்வொருவனும் தனது அதிகபட்ச ஆற்றலை மிச்சமீதமின்றிச் செலுத்தி உழைக்காவிட்டால், எதையேனும் செய்து சாதிக்க முடியுமா? உழைப்பே வடிவெடுத்த சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்மகனையே திருமகள் நாடிச் செல்கிறார் , பின்னால் திரும்பிப் பார்க்கத் தேவையில்லை முன்னோக்கிச் செல். அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை அளவில்லாத பொறுமை இவையே நமக்குத் தேவை. இவை இருந்தால் மட்டுமே, மகத்தான காரியங்களை நம்மால் சாதிக்க முடியும்.

## கூட்டுறவு நகர் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் 3ஆவது கூட்டுறவு நகர் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் மஞ்சத்தடியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு கூட்டுறவு நகரை திறந்து வைக்கவுள்ளதாக நல்லூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (6-4-30)

## உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்கென நல்லூர் பி.செ. சமுர்த்திப்பிரிவுக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவிற்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளுக்கு என 11 இலட்சத்து 70ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதியில் ஜே/96, 116, 103 ஆகிய கிராம அலுவர் பிரிவிலுள்ள கிராமியச்சந்தை , பாடசாலை வீதி, கந்தர்மடம் 5ஆம் ஒழுங்கை, குறுக்கு வீதி ஆகியன புனரமைக்கப்படவுள்ளதுடன் வீதிகளுக்கு கொங்கிறீட் இடப்பட்டு வெள்ள வாய்க்கால்களும் புனரமைக்கப்படவுள்ளது.

மேலும் வாழ்வாதார சுழற்சி நிதியத்தில் இருந்து சமுர்த்திப் பயனாளிகளுக்கு சுய தொழில் நிதிவழங்குவதற்கு யாழ். அரச அதிபரின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள தாகவும் பயனாளிகள் கொடுப்பனவைப் பெற்று வருவதாகவும் சமுர்த்திப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (6-4-30)

## நவராத்திரி பாமாலை



### வரங்கள் பல பெற்றிடுவோம்



சக்தியின் வடிவங்கள் மூன்று
துர்க்கா, லக்சுமி,சரஸ்வதி
அவை தந்திடும் வரங்கள் மூன்று
வீரம்,செல்வம்,கல்வி

ஒன்பது தினங்கள் விரதமிருந்து
சக்தியை நாமும் வழிபட்டால்
வரங்கள் பல பெற்றிடலாம் - வாழ்வில்
வரங்கள் பல பெற்றிடலாம்

சி.கிசோத்,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

### நல்லவளாம் நவசக்தி

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பவளே
வெள்ளை மனத் தாயவளே
செந்தாமரையில் வீற்றிருப்பவளே - இங்கு
செல்வத்தை அள்ளித் தருபவளே
ஆங்கார ஓங்கார வீரத்தாயவளே
அருள் ஆசிகளை என்றும் நல்குபவளே
நல்லவளாம் நவசக்தி நாயகியே
நல்வரம் அள்ளித் தந்து காத்திடுவாயே !

க.தஜேந்திரன்,வட்டுக்கோட்டை

## பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தென்மராட்சி சிவன் கோவிலடி கலைமண்டபத்தில் கல்லூரி அதிபர் கே. அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் என்.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பதுடன் பரிசில்களை திருமதி கௌரி சண்முகலிங்கன் வழங்கிக் கௌரவிப்பார். (6-4-29)

## டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான திட்ட உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளை அலுவலகத்தில் கொழும்பிலிருந்து வந்த பிரதிநிதி களால் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கான அலுவலக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளை அலுவலகத்தில் ஒரு பகுதியில் அமையவுள்ளது. இச் சங்கம் முன்பும் யாழ்.மாவட்டத்தில் சிறப்பாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (6-134)

## புதிய யோகாசன வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஓம் யோகாசன பயிற்சி நிலையத்தால் யாழ்.சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் புதிய யோகசான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் வகுப்புக்கள் தினமும் காலை 6மணிமுதல் 7மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் உடல், உள ஆரோக்கியத்திற்கான யோகாசனமும்,தளர்வுப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. துறைசார் வல்லுநர்களின் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் இவ் வகுப்பில் கலந்துகொள்ள முடியுமென அறிவுக்கப்பட்டுள்ளது. (6)

## விவசாயத் திணைக்களத்தினால் இன்று விதை நெல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கைவிடப்பட்ட நெற். காணிகளில் செய்கையை மேற்கொள்விருக்கும் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதை நெல்லின் ஒரு தொகுதி விவசாயத் திணைக்களத்தினால் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக மறவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய பிரதேசங்களில் கைவிடப்பட்ட நெற்செய்கைக் காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகளுக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள கல்லடி மூட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள வீட்டில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை விதை நெல் விநியோகிக்கப்படவுள்ளது.

இதில் மறவன்புலவு, தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்களிடம் நெற்செய்கையை மேற்கொள்வதற்காக பதிவுகளை மேற்கொண்டு அவர்களது பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட காணி உரிமையாளர்கள் மற்றும் சட்ட ரீதியான குத்தகை ஆவணங்களைக் கொண்டிருக்கும் விவசாயிகள், ஆகியோர் வருகை தந்து விதை நெல்லைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

அத்துடன் செய்கை மேற்கொள்ளும் காணியின் விஸ்தீரணத்திற்கு ஏற்ப விதை நெல் விநியோகிக்கப்படவுள்ளதால் பொலிசாக்கு ஒன்றினையும் எடுத்து வருமாறு வேண்டப்படுகின்றார்கள். (6)




## பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சிவானந்த மகரிஷி யோக நிலையத்தினால் கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மட தியான மண்டபத்தில் நடத்தப்பட்ட யோகாசனப் பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் விரைவில் நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6.30 முதல் 7.30 மணிவரை நிலையத்திற்கு வந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிலையப் பொருளாளர் ச.விமேஸ் தெரிவித்துள்ளார். (6-4)

## இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நலன்புரி நிலைய முகாம்களில் இருந்து இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலக பிரிவில் மீளக் குடியமர்ந்த்வர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவன பிரதிநிதிகள் பெறுமதி மிக்க பிளாஸ் டிக் பொருட்கள் நல்லூர் பிரதேசச் செயலக வளாகத்தில் வைத்து அண்மையில் வழங்கப் பட்டுள்ளது. (30)

## சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமூக விழிப்புணர்வுச் செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)


சொண்ட் நிறுவனத்தினால் கால நிலை மாற்றம் அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் ஏற்படுத்தும் நோக்கத்துடன் சொண்ட் நிறுவன பணியாளர்களும் நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளும் இணைந்து விழிப்புணர்வுச் செயற்றிட்டம் ஒன்றினை அண்மையில் கொக்குவில் மேற்கு கிராமத்தில் மேற்கொண்டனர்.

இவ் விழிப்புணர்வுத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு 60 பேர் கலந்துகொண்டு சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து அக் கிராமத்தில் உள்ள 220 வீடுகளுக்கு தரிசனம் செய்து குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் காலநிலை மாற்றம் அனர்த்தம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் இவ்வாறு குடும்பம் மற்றும் சமூக மட்டத்தில் இத்திட்டத்தினை செயற்படுத்துவதனூடாக அபாயப் பாதிப்புக்களின் அளவை எவ்வாறு குறைத்துக் கொள்ள முடியும் என்பன பற்றிய துண்டுப் பிரசுரமும் வழங்கப்பட்டது.

இதன்மூலம் குறித்த கிராமமக்கள் அனைவரிடத்திலும் அனர்த்த அபாயக் குறைப்புத் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளதாக சொண்ட் நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர். (6-30)





சங்கானை ப.நோ.கூ.சங்கத்தினால் வட்டுக்கோட்டை நவீன சந்தை கட்டடத் தொகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சிறிய கூட்டுறவு நகர் கடைத்தொகுதி திறப்புவிழாவில் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதையும், கட்டடத்தினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூகசேவைகள் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-வட்டு.அஜித், கிருஷ்ணா)

# பஸ்-மினிவான் மோதி விபத்து சாரதிகள் இருவரும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்து சபை பஸ்ஸும் மினிவானும் வீதியைக் கடக்கும் போது ஒன்றை ஒன்று மோதிக் கொண்டதில் வாகன சாரதிகள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.50 மணியளவில் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெரு சந்தியில் இடம்பெற்றது.

இதில் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த 794 இலக்கமுடைய பஸ்ஸும் சாட்டி கடற்கரைக்கு சென்றுவிட்டு யாழ்.நோக்கி வந்த 769 இலக்கமுடைய மினிவானுமே மோதிக்கொண்டன.

இதில் அரச பேருந்து மதிலொன்றுடன் மோதுண்ட நிலையில் முன்பக்கக் கண்ணாடிகள் சேதமடைந்திருப்பதுடன் இரு சாரதிகளும் படுகாயமடைந்தனர்.

பஸ் சாரதியான மீசாலை வடக்கைச் சேர்ந்த செல்லையா யோகராஜன்(வயது-57) மினிவான் சாரதியான சுன்னாகத்தைச் சேர்ந்த தவராசா ஜெலின்(வயது-27) ஆகியோர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பயணிகளுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை.

(ச-30)

# நியமனம் வழங்குதல் தொடர்பாக கலந்துரையாட பின்வருவோருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய நியமனம் வழங்குதல் தொடர்பாக கலந்துரையாட பின்வருவோரைஇன்று காலை 8.30 மணிக்கு தனது அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். அழைக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு;

**யாழ்ப்பாணம்**

திருமதி ரசிதா சுதாகரன்,திருமதி துரைரத்தினம் தெய்வ மலர்,திருமதி சுகிர்தா சிவயோகன், திருமதி மார்ரெலன்ஸ் ரொசிரா ரேனுஜா,திருமதி கிரிதரன் உஷாநந்தி,திருமதி தேவகி யோகேந்திரன்,திருமதி சுபரஞ்சினி சிவகண நாதன், சின்னராஜா பிரதீபா,

**வலிகாமம்**

செல்வி சசிகுமாரி சின்னத்தம்பி, செல்வி சின்னத்துரை கிருஷ்ணசாந்தி, திருமதி ஜெயபானு சுரேந்திரநாத்,

**வடமராட்சி**

செல்வி துரைசிங்கம் கலைச்செல்வி, திருமதி இராஜினி ரஜினிகாந்,செல்வி வேதநாயகம் டெனிஸ்மேரி, திருமதி செல்வ நாயகம் சுபா, திருமதி நளாயினி அரவிந்தன், திருமதி ராஜ் மனோகரன் கமலினி,செல்வி அனுஜா முருகேசபிள்ளை,செல்வி துரைராஜா காயத்திரி, கணேசன் வாசுதேவன், சிவநாதன் சிவதாஸ், யேசுதாசன் தவக்குமார், கந்தசாமி விஜிதரன், சண்முகநாதன் ராஜகுமார், திருமதி நிர்மலராணி தேவராஜா,

**தென்மராட்சி**

திருமதி சிவமலர் ஜோகேஸ்வரன், தங்கராஜா ஜெயகரன்,

**தீவகம்**

செல்வி பெரியதம்பி சிவதர்சினி, திருமதி ஜெயராணி சிவ நேசன். (ச)




நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக் கழக மாணவர்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டபின் துணைவேந்தர் உரையாற்றுவதையும் பல்கலைக் கழக மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# நவராத்திரி விழா

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் பாடசாலையின் நவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வி. கணேசராசா கலந்து கொள்ளவுள்ளார். (ச-3)

# வடக்கு மாகாண விளையாட்டில்...

**100 மீ.ஓட்டம்**
**ஆண்கள் பிரிவு**

100 மீற்றர் ஓட்டப்போட்டி ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீரர் ஆர்.ஏ. ஜெகத்குமார முதலாமிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதில் மற்றொரு வவுனியா வீரர் எஸ். கபாஸ்கரன் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்ட வீரர் ஏ.ஜெயரோம் வெண்கலப் பதக் கத்தையும் வென்றனர்.

**100 மீ.ஓட்டம்**
**பெண்கள் பிரிவு**

100 மீற்றர் ஓட்டப் போட்டி பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீராங்கனை எம்.மோஷாந்தி 13 செக்கன்கள் 9 விநாடிகளில் தூரத்தை எட்டி முதலாமிடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதில் வவுனியா மாவட்ட வீராங்கனைகளான ஆர்.நிரஞ்சலா 14.3 செக்கன்களில் தூரத்தைக் கடந்து வெள்ளிப் பதக்கத் தையும், எஸ்.கலைவாணி 14.9 செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**200 மீ.ஓட்டம்**
**ஆண்கள் பிரிவு**

200 மீற்றர் ஓட்டப் போட்டி ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீரர் எம்.சுபாஸ்கரன் 23 செக்கன்கள் 4 விநாடிகளில் போட்டித் தூரத்தை எட்டி தங்கப்பதக்கத்தையும் யாழ். மாவட்ட வீரர்களான கே.சாந்தராஜா 24 செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தையும், ஏ.இ.அமல்ராஜ் 24 செக்கன்கள் 2 விநாடிகளில் தூரத்தை தாண்டி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**200 மீ.ஓட்டம்**
**பெண்கள் பிரிவு**

200 மீற்றர் ஓட்டம் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீராங்கனை எம்.மோஷாந்தி தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதில் வவுனியா மாவட்ட வீராங்கனைகளான நிரஞ்சலா வெள்ளிப் பதக்கத்தையும், எஸ்.கலைவாணி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**5000 மீ.ஓட்டம்**
**ஆண்கள் பிரிவு**

5000 மீற்றர் ஓட்டப் போட்டி ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீரர் வி.பிரதீபன் 17 நிமிடங்கள் 10.7செக்கன்களில் தூரத்தை எட்டி முதலாமிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதில் வவுனியா மாவட்ட வீரர் எ.சசிகரன் 17நிமிடங்கள் 11.4 செக்கன்களில் தூரத்தைக் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்.மாவட்ட வீரர் ஞானேஸ்வரன் 17 நிமிடங்கள் 18.3செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**5000 மீ.ஓட்டம்**
**பெண்கள் பிரிவு**

5000 மீற்றர் ஓட்டப் போட்டி பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனை இ.எச்.ஆர்.எல்.ஹேரத் 22 நிமிடங்கள் 16.4 செக்கன்களில் தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதில் யாழ்.மாவட்ட வீராங்கனை எல். மேர்ஷி 22 நிமிடங்கள் 17.4 செக்கன்களில் தூரத்தை எட்டி வெள்ளிப்பதக்கத்தையும், மன்னார் மாவட்ட வீராங்கனை ஜி.ரேனித்தா 22 நிமிடங்கள் 43.3 செக்கன் களில் தூரத்தைக் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**400 மீ.ஓட்டம்**
**பெண்கள் பிரிவு**

400 மீற்றர் ஓட்டப் போட்டி பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீராங்கனை மோஷாந்தி 1 நிமிடம் 6 செக்கன்கள் 8 விநாடிகளில் தூரத்தை எட்டி தங்கப் பதக்கத்தையும் வென்றார்.

இதில் வவுனியா மாவட்ட வீராங்கனைகளான கே.லகாஷினி 1 நிமிடம் 8 செக்கன்களில் தூரத்தைக் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும்,பி.கல்பனா ஒரு நிமிடம் 09 செக்கன்கள் 7 விநாடிகளில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**800 மீ.ஓட்டம்**
**பெண்கள் பிரிவு**

800 மீற்றர் ஓட்டப் போட்டி பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனை பி.கல்பனா 2 நிமிடங்கள் 38 செக்கன்கள் 4 விநாடிகளில் தூரத்தை எட்டி தங்கப்பதக்கத்தைப் பெற்றார்.

இதில் யாழ்.மாவட்ட வீராங்கனைகளான ஆர்.காவேரி 2 நிமிடங்கள் 47.4 செக்கன்களில் தூரத்தைக் கடந்து வெள்ளிப்பதக்கத்தையும் ஆர்.அனுஷியா 2 நிமிடங்கள் 53.2 செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

**குண்டெறிதல்**
**பெண்கள் பிரிவு**

குண்டெறிதல் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனை ரி.அனுஷா 10.64 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதில் யாழ்.மாவட்ட வீராங்கனை எம். வினோஜா 7.91 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும் மன்னார் மாவட்ட வீராங்கனை என்.யசோதினி 7.22 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

**தட்டெறிதல்**
**ஆண்கள் பிரிவு**

தட்டெறிதல் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட வீரர்கள் தங்கம் மற்றும் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதில் யாழ்.மாவட்ட வீரர்களான எம்.பார்த்தீபன் 35.89 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் வி.ஹரிகரன் 35.51 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும் ஆர்.ரவிக்குமார் 34.37 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

**ஈட்டி எறிதல்**
**ஆண்கள் பிரிவு**

ஈட்டி எறிதல் போட்டி ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீரர் எஸ்.வாகீசன் 47.51 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தையும் வென்றனர்.

இதில் மற்றொரு யாழ்.மாவட்ட வீரர் எம். பார்த்தீபன் 47.30 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும் மன்னார் மாவட்ட வீரர் ஜே.ஆர்.விமலதாஸன் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

**ஈட்டி எறிதல்**
**பெண்கள் பிரிவு**

ஈட்டி எறிதல் போட்டி பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீராங்கனை எம்.வினோஜா 29.8 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதில் வவுனியா மாவட்ட வீராங்கனை வை.புஷ்பாதேஷ 25 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும் மன்னார் மாவட்ட வீராங்கனை பிரிடா வினோதினி 19.62 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

**நீளம் பாய்தல்**
**பெண்கள் பிரிவு**

நீளம் பாய்தல் போட்டி பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனை எஸ்:கலைவாணி 4.61 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதில் யாழ்.மாவட்ட வீராங்கனை எஸ்.கீர்த்திகா 4.47மீற்றர் நீளம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்ட வீராங்கனை எஸ்.ரேகலா 4.45 மீற்றர் நீளம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர்.

**உயரம் பாய்தல்**
**ஆண்கள் பிரிவு**

உயரம் பாய்தல் போட்டி ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீரர் எம்.கிருஷ்ணா 1.84 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதில் மற்றொரு யாழ்.மாவட்ட வீரர் ஆர். ஜெயரூபன் 1.81 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்ட வீரர் எம்.அந்தோனிதாஸ் 1.71 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**உயரம் பாய்தல்**
**பெண்கள் பிரிவு**

உயரம் பாய்தல் போட்டி பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீராங்கனை வி.கஜிதா 1.48 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதில் மற்றொரு யாழ்.மாவட்ட வீராங்கனை எஸ்.கீர்த்திகா 1.45 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்ட வீராங்கனை எஸ்.எம். பெனித்தா 1.35 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

**110 மீ.தடைதாண்டல்**
**ஓட்டம் ஆண்கள் பிரிவு**

110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் யாழ். மாவட்ட வீரர் எஸ்.கோபன் தங்கப்பதக்கத்தை வென்றார்.

இதில் வவுனியா மாவட்ட வீரர் எம்.கேசவன் வெள்ளிப்பதக்கத்தையும் யாழ்.மாவட்ட வீரர் ஆர்.ஜெனனன் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

**100 மீ.தடைதாண்டல்**
**ஓட்டம் பெண்கள் பிரிவு**

100 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியில் மன்னார் மாவட்ட வீராங்கனை வி.ஏஞ்சல் தங்கப்பதக்கத்தையும் யாழ்.மாவட்ட வீராங்கனைகளான ப.பத்மசாந்திலா வெள்ளிப் பதக்கத் தையும் பி.மயூரி வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர்.

**4X400 அஞ்சல்**
**ஓட்டம் ஆண்கள் பிரிவு**

4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டி ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்டம் முதலாமிடத்தையும் மன்னார் மாவட்டம் இரண்டாம் இடத்தையும் யாழ்.மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

**4X400 அஞ்சல்**
**ஓட்டம் பெண்கள் பிரிவு**

4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்டம் முதலாமிடத்தையும் வவுனியா, மன்னார் மாவட்டங்கள் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றன.

(ச-5)

## மக்களை மீளக்குடியமர்த்து...

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் இந்த வாரத் தொடக்கத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசி உள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் பணிகளை விரைவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மகிந்தவிடம் அலோக் பிரசாத் எடுத்துக் கூறினார். மக்களின் மீள்குடியமர்வு தாமதம் இன்றி விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் இலங்கைக்கு இறுக்கமாகத் தெரிவித்திருக்கிறார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

ம்ற்றொரு வழியிலும் இந்தியா தனது கவலையை வெளிப்படுத்தி உள்ளது. இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்காவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இந்தியாவின் கவலைகள் பற்றி அவரும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இடம்பெயர்ந்த மக்களைத் தொடர்ந்தும் முகாம்களில் தடுத்து வைத்திருப்பது இந்தப் பிராந்தியத்தின் உறுதித் தன்மைக்குப் பாதகமாக அமையும் என நாராயணன் தனது கடி தத்தில் சுட்டிக்காட்டி உள்ளார் என்று இராஜ தந்திர வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த விவகாரங்கள் குறித்து கடந்த புதன் கிழமை நடைபெற்ற நாட்டின் தேசிய பாது காப்புச் சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது. ஆனால் அங்கு எப்படி விவாதிக் கப்பட்டது அல்லது என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்ற விபரங்கள் வெளிவரவில்லை.

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வழக்கமாகக் கலந்துகொள்பவர்களுக்கு மேலாக ஜனாதிபதியின் ஆலோசகரும் சகோதரருமான பசில் ராஜபக்ஷ மற்றும் வடக்கு-கிழக் கில் உள்ள பிராந்தியப் படைகளின் தளபதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் பொதுச்செயலாளர் லின் பாஸ்கோவே கொழும்புக்கு வந்திருந்த சமயம் இந்தியாவின் கவலைகளுக்கான பதிலை ஜனாதிபதி வெளிப்படுத்தியிருந்தார். எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீளக்குடி யமர்த்தி விடுவதாக அவர் ஐ.நா. விற்கு உறுதி அளித்திருந்தார். முன்னதாக ஆறு மாத காலத்திற்குள் மீள்குடியமர்வுப் பணிகள் முடிக்கப்படும் என இந்தியா விற்கு ஜனாதிபதி உறுதி கூறியிருந்தார். (ச-5)

## வாகன விபத்தில் சிக்கி...

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற மீள் குடியேற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் முரளிதரன் அங்கிருந்து ஹெலி கொப்டரில் கொழும்பிற்கு வருகை தந்துள்ளார்.

ஹெலிகொப்டர் இலங்கை விமானப் படைக்கு சொந்தமான மைதானத்தில் தரையிறங்கியது. அங்கிருந்து குண்டு துளைக்காத காரில் அமைச்சர் வீட்டிற்கு சென்ற வேளையிலேயே இந்த விபத்து நேற்று மாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

அமைச்சரின் வாகனத்தின் மீது எதிரே பஸ் மோதியதனாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத் தில் அமைச்சருக்கு கால்களிலும் தலையிலும் சிறு காயங்கள் ஏற்பட்டதுடன் மெய்பாதுகாவலர் மற்றும் சாரதிக்கு கடும் காயம் ஏற்பட்டுள்ளது. (ச-5)

## செங்கல்பட்டிலுள்ள ஈழ...

வருடங்களுக்கு மேலாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களே உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமக்கு எதிரான எந்தக் குற்றச்சாட்டுக்களையும் சுமத்தாமல் பொலிஸ் தம்மைத் தொடர்ந்து தடுத்து வைத்துள்ளனர் என்று குற்றச்சாட்டு கின்றனர்.

தமது உறவினர்கள் வசிக்கும் சாதாரண முகாம்களுக்கு தம்மை அனுப்பி வைக்குமாறு குடும்பங்களுடன் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு அவர்கள் கோருகின்றனர்.

முகாம்களில் உள்ளவர்களில் ஆறு பேர் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் இந்த உண்ணாநிலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## யாழ்ப்பாண பல்கலைக்...

மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போது பல்கலைக்கழகக் கற்கை நெறிகளைத் தொடரவுள்ள மாணவர்கள் சமுதாய வளர்ச்சிக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் வன்முறைக்கு உதவ கூடாது. எமது சுதந்திரங்களை நாமே பாதுகாப்பதுடன் அவற்றை எவருக்கும் தாரை வார்த்துக் கொடுக்க கூடாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து அழைத்து வரப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களைக் கையளிக்கும் இந்நிகழ்வில் யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ், யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் பிரதீபன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் ஸ்ரீநிவாசன் மற்றும் பல்கலைக்கழக மாணவத் தலைவர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-5)

## வடமாகாண விளையாட்டு விழா...

சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாண விளையாட்டுவிழாவின் இறுதி நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் 15 ஆண்டுகளுக்குப்பின் வடமாகாண விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றமை மகிழ்ச்சியை தருகின்றது.

5 மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் இவ்விளையாட்டு விழாவில் பங்கு பற்றியமை மாணவ சமுதாயத்துக்கிடையே சமத்துவமான ஒற்றுமை பலத்தை நிருப்பித்துள்ளது.

மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்நாட்டில் நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை பெற்றுத்தந்துள்ளார்.

சமாதானம் ஏற்பட்ட நிலையில் வடமாகாணத்தில் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் பசில் ராஜபக்ஷ பெரும் பங்காற்றி வருகின்றார்.

இவ்விளையாட்டுப் போட்டி ஆரம்பமே தவிர முடிபல்ல. எதிர்வரும் காலங்களில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கு ஒப்பாக மிக பிரமாண்டமாக நடத்தப்படும்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் முதல் இடங்களை பெற்ற சிறந்த வீர வீராங்கனைகளை தெரிவு செய்து அவர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளேன்.

அத்துடன் இந்தப் பயிற்சிப் பாசறையில் திறமையாக செயல்படும் வீரர்களை சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டு விழா
சமதானத்துக்கு அடித்தளம்

நாட்டில் நிலைத்து நிற்கக் கூடிய சமா தானத்தை ஏற்படுத்தும் அடித்தள மாக வடமாகாண விளையாட்டு விழா அமைந்துள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்ற வடமாகாண விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 5 மாவட்டங்களையும் சேர்ந்த வீர வீராங்கனைகள் தமிழ்ப்பண் பாட்டுக்குள் யாரும் ஊரே யாவரும் கேளிர் என்ற கோட்பாட்டிற்கு அமைவாக யாழ். மாவட்டத்தில் இப்போது ஒருங்கிணைந்து கலந்து கொள்வது பழைய நிகழ்வுகளை நினைவு கூருவதாக அமைந்துள்ளது.

இவ் மாணவர்கள் விளையாட்டு விழாவில் பங்கு பற்றுகின்றமை மாணவர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்துவதாக அமைந் துள்ளதுடன் இந்த வடமாகாண விளையாட்டு விழா நாட்டில் நிலை த்து நிற்கக் கூடி ய சமாதானத் திற்கு அத்திபார மாக அமையும் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-7)


### தவறிவிட்டது

கம்பர்மலை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சர்வலோகநாதன் சாஜீபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (840422615V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம்(A-01302681l) ஆகியன உடுப்பிட்டி வீதி-வல்லை வீதியூடாக யாழ்ப்பாணம் செல்லும் போது தவறி விட்டது.

கண்டெடுத்தவர்கள் 0213218024 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
(C-3351)



YOUR FUTURE
ACCA
IN FINANCE AND ACCOUNTING
*Association of Charted Certified Accountants*

- ★ கணக்கியலிலும், நிதித்துறையிலும் ஐக்கிய இராச்சியப்பட்டத்தையும் உள்ளூர்,சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தகுதியையும் வழங்குகின்றது.
- ★ க.பொ.த. (உ/த) இரண்டு பாடத் தகுதிகள் or 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் இணைந்து கொள்ளலாம்.
- ★ பட்டதாரிகளுக்கு முழுமையான பாட விலக்களிப்புகளுடன் UK செல்வதற்கான விசா ஒழுங்குகள்.
- ★ புதிய மாணவர்களுக்கான பதிவுகள் சனி ,ஞாயிறு தினங்களில் நிறுவனத்தில் நடைபெறுகின்றன.
- ★ விரிவுரைகள் வார, வார இறுதி நாட்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
- ★ British Council இன் அனுமதியுடன் யாழ்.நகரில் பரீட்சைகள்

*BUSINESS PARTNER:MERCURY*

Jaffna Technical Institute(JTI)
*இல.45 ,மணிக்கூட்டு வீதி ,யாழ்ப்பாணம்.*
T.P.:0777855800, E-Mail:accajaffna@gmail.com
(C-3337)


# மரண அறிவித்தல்கள்

## சிவசம்பு செந்தில்நாதன்



(வங்கி முகாமையாளர்)
[Bank of Ceylon,Jaffna]

அளவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு-செந்தில்நாதன் 20-9-2009 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு-செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரெத்தினம்-இரத்தினபூபதி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவமலரின் அன்புக்கணவரும், அபிராமி (ஆசிரியை-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), மயூரன் (லண்டன்), நிவேதிதா (மாணவி-யாழ். இந்து மகளிர் கல்லூரி-2010, வர்த்தகப்பிரிவு) ஆகியோரின் அன்புத்தந்தையும், லிங்கராஜ் (ஆசிரியர்-திருக்கு டும்ப கன்னியர் மடம்) இன் அன்பு மாமனாரும்,யருசனின் அன்புப் பேரனும், சிவநாதன் (சாவகச்சேரி), லோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சிவதாசன் (கொழும்பு), சிவரஞ்சினி (கனடா), புவிராஜ் (கொழும்பு) மற்றும் தியாகேஸ்வரி (சாவகச்சேரி), லோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.566, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(யா/இந்து ஆரம்ப பாடசாலை
அருகாமையில்)

தகவல்
மனைவி,பிள்ளைகள்
மருமகன்
021-2225205

(3549)

## சீதாலெட்சுமி சிதம்பரநாதன்

(6ஆம் வட்டாரம்-மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சீதாலெட்சுமி சிதம்பரநாதன் 20.9.2009 (நேற்று) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன்-சிவயோகம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் அருணகிரிநாதன், பத்மநாதன் (பாலு) சத்தியபாமா (மணியம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லெட்சுமியம்மா, முத்துலெட்சுமி, லிங்கப்பிள்ளை ஆகியோரின் அன்புமைத்துனியும் காலஞ் சென்ற வைகுந்தவாசன் மற்றும் துளசிவாசன், திருப்பதிவாசன், சிறிரங்கவாசன், சத்தியநாராயணன், உருத்திராவதி, லெட்சாவதி, காயஷ்சிறி, தாட்ஷாயினி, திருமகள், காலஞ்சென்ற திருவருள் மற்றும் திருவாசுகி, திருவருட் செல்வன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.09, தேவாலய வீதி,
1ஆம் குறுக்குத்தெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்
லி.சத்தியபாமா (மணியம்மா)
(சகோதரி)

(C-3350)


Jaffna Technical Institute(JTI)
No. 45, Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)

*பிரிவு II*
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING (DCA)
ACCOUNT EXPRESS + TALLY ACCOUNTING
QUICK BOOKS + ASSET MANAGER + PEACHTREE
*வார நாட்கள்* : 7.00- 8.00 A.M
*வார இறுதி நாட்கள்:* 10.00- 11.00 A.M, 2.00- 3.00 P.M
பதிவுகள் வார இறுதி நாட்களில் மேற்கொள்ளப்படுகின்றன
பதிவுக் கட்டணம் இலவசம்
(C-3338)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.